கொக்குவில்

# அருள்மிகு கிருபாகரசிவசுப்பிரமணியசுவாமி கோவில் (புதுக்கோவில்) வரலாறு



கற்பக்கிருகத்தின் மேலுள்ள விமானம்



தண்டாயுதபாணி சந்நிதி



கொக்குவில்

## முத்துராஜா மீனாட்சிசுந்தரம்

அந்தியேட்டித்தின வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University ... LIBRARY
01 DEC 2021
704396 24
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கொக்குவில்

# அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) வரலாறு

கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை

University ... LIBRARY
01 DEC 2021

கொக்குவில்

**முத்துராஜா மீனாட்சிசுந்தரம்**

அந்தியேட்டித்தின வெளியீடு

2004.05.27

704396

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

இனிய எங்கள் அப்பாவாய்
ஏற்ற கல்வி எமக்களித்துக்
கனிவோ டெம்மை நெறிப்படுத்திக்
கற்றோர் சபையின் முன்னாக்கி
மனித ரென்ன வாழ்வளித்த
மனிதன் நினைவாய் இந்நூலைப்
புனிதன் முருகன் தாள்களிலே
புனைந்து வழுத்தி நிற்கின்றோம்.

| துணைவியார் | பிள்ளைகள் | மருமக்கள் |
|---|---|---|
| **மீ. பரமேஸ்வரி** | **சுபாஷாமினி** | **ஆ. கந்தசாமி** |
| | **அனுஷா** | **க. பாலசுப்பிரமணியம்** |
| கல்லூரி வீதி, | **ஜெகரூபி** | **பூ. ரூபேந்திரன்** |
| கொக்குவில் கிழக்கு. | **சரவணபவன்** | - |
| கொக்குவில் | **சாயிரேகா** | **க. சோமஸ்கந்தராஜா** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர்
# முத்துராஜா மீனாட்சிசுந்தரம்



தோற்றம்
**1927-09-14**

மறைவு
**2004-04-27**

## திதிவெண்பா

தாரண சித்திரைப் பூர்வபக்கத் தட்டமிதான்
பூரணன் மீனாட்சி சுந்தரனெம் - ஏரணனாம்
முத்துராஜன் மைந்தன் முதல்வன் திருவடியை
நத்தி நலம்பெற்ற நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்றினிது மேவிச் சிந்தையினினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வது கந்தனை மனமொழி மெய்களால் வழிபடுபவர்க்கு ஆகக்கூடியதுதான் என்பதை நம்பியவர். நம்பிக்கை வழி நின்றவர் எங்கள் அப்பா முத்துராஜா மீனாட்சிசுந்தரம் அவர்கள். அதனால் அவர் நினைவை நிலைநிறுத்த அப்பாவின் தொண்டுக்கு உரியதாகி இருந்த கொக்குவில் புதுக்கோயிலுடன் தொடர்புடையதொரு நூலை வெளியிட விரும்பினோம். இந்த எமது எண்ணத்துடன் கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களுடன் கலந்துரையாடினோம். அவர் வழிகாட்டலின் பேரில் அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வரலாற்று நூலை வெளியிடத் துணிந்தோம்.

பண்டிதர் எழுதி முடித்த நூலை மனநிறைவுடன் பெற்ற யாம் அப்பாவின் நினைவாக வெளியிடுவதிற் பெருமித மடைகின்றோம். இந்த நூலை எழுதும் பெருமுயற்சியாற் பண்டிதர் தமக்கேற்பட்ட பொருட் செலவையோ கால விரயத்தையோ சிந்திக்கவில்லை. எந்தவித வருவாயையும் அவர் எதிர்பார்க்கவும் இல்லை. எந்தவித பிரதி உபகாரத்தையும் அவர் ஏற்றுக்கொள்ளவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டார். முருகன் திருவருள் என்றும் அவருடன் ஆகுக.

புதுக்கோவில் வரலாற்றினை வெளியிடவுள்ள முயற்சி பற்றிய செய்தியை ஆலய பரிபாலன சபையினர்க்கு அறிவித்தோம். அவர்கள் மனநிறைவுடன் அங்கீகரித்தனர். தகவுரை ஒன்றும் வழங்கியுள்ளனர். ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ க. சிவதாசக் குருக்கள் பிரார்த்தனை உரை ஒன்றை உதவியுள்ளார்கள்.

கொழும்பு கீதா பதிப்பகத்தினர் அழகுற அச்சுப் பதிவாக்கித் தந்துள்ளனர்.

இவர்கள் எல்லோர்க்கும் கொக்குவில் புதுக்கோயில் முருகன் திருவருள் நிறைவாகக் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். இவர்களை நன்றியுடன் என்றும் நினைவோம்.

| துணைவியார் | பிள்ளைகள் | மருமக்கள் |
|---|---|---|
| **மீ. பரமேஸ்வரி** | **சுபாஷாமினி** | **ஆ. கந்தசாமி** |
| | **அனுஷா** | **க. பாலசுப்பிரமணியம்** |
| 179, கடற்கரை வீதி, | **ஜெகரூபி** | **மு. ரூபேந்திரன்** |
| நீர்கொழும்பு. | **சரவணபவன்** | **-** |
| Tel : 031 2237884 | **சாயிரேகா** | **க. சோமஸ்கந்தராஜா** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில்
கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோவில் பரிபாலன சபை
(சங்க அமைப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது)
KOKUVIL KIRUPAKARA SIVASUBRAMANIA SWAMY KOVIL PARIPALANA SABAI
(Regd: Under the Societies Ordinance)

காங்கேசன் துறை வீதி
கொக்குவில்

K.K.S. Road,
Kokuvil

A/c.No: Bank of Ceylon Super Grade Branch,Jaffna 0005-01-0001904-2

# தகவுரை

பொன்னார்ந்திலங்கு கொக்குவிற் பதிப் புதுக்கோவிலின் பொலிவில் திளைத்த முத்துராஜா மீனாட்சிசுந்தரம் அவர்கள் முருகனை நீங்காதுறையும் பெரும் பேறு பெற்று அவன் திருவடி நிழலைத் தமது உண்மை வாழ்விற்கு உரிய இடமாக்கிக் கொண்டார்கள். அவர் பிள்ளைகள், தந்தை பெற்ற பெருவாழ்வை எல்லோரும் நினைய வேண்டு மென்றும், முருகனுடனாக்கி நினைய வேண்டுமென்றும் விரும்பினார்கள். எனவே அவன் வரலாற்றை எழுதிக் கல்வி உலகின் தேடலுக்கு வழிசமைக்க ஆசைப்பட்டார்கள். இந்தத் தமது விருப்பைக் கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களிடம் சொல்லி ஆலோசனை பெற்றார்கள். எங்கள் உதவியையும் பெற்றுப் பண்டிதர் அரியதோர் வரலாற்று நூலைப் படைத்து உதவியுள்ளார்கள். எல்லாம் முருகன் திருவருள்தான். இந்த வரலாற்று நூல் உயர்தர வகுப்பிற் கற்கும் மாணவர்களுக்கு அவர்கள் சிந்தனையை மேலுந் தூண்டுதலைச் செய்ய வல்லது. நல்லதொரு தரவுப் பொக்கி ஷம் என்று இதனைச் சொல்லலாம். முருகன் திருவருள் இந்த நூலாசிரியருடனாக வேண்டும். இந்த நூல் வெளியா தற்குக் காரணராய மீனாட்சிசுந்தரனார் ஆத்மா என்றுந் திருவருட்டிளைப்புடனாகுக. என்று வேண்டுதல் செய்வோம்.

**செ. மதனசுரேந்திரன்**
உப தலைவர்
பரிபாலன சபை

2004 - 05 - 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கொக்குவில்

## அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) பிரதம குரு சிவஸ்ரீ க. சிவதாசக் குருக்கள்

# பிரார்த்தனை உரை

*எல்லோருடனும் அன்புடன் பழகும் இனிய சுபாவமுடைய அமரர் முத்துராஜா மீனாட்சிசுந்தரம் அவர்கள் இன்று எம்முடன் இல்லை. ஆனால் அவர் நடமாட்டம் எம் கண்ணிற் பட்டுக்கொண்டே இருக்கிறது. கொக்குவில் இந்துக் கல்லூரியிற் பணிபுரிந்த காலத்தேகூட நாளும் அவர் முருகனைத் தரிசிக்கத் தவறியதில்லை. இன்று அவர் ஆத்மா முருகன் சந்நிதியை நிரந்தர வாழ்விடமாகக் கொண்டுவிட்டது.*

*அமரரின் அந்தியேட்டித் தினத்திற் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான வரலாற்று நூலொன்றை வெளியிட அவர் பிள்ளைகள் முயற்சிப்பதாக அறிகிறேன். நல்ல முயற்சி; செவ்வனம் நிறைவெய்த முருகன் அருளை வேண்டுகின்றோம். அத்தோடு அமரர் மீனாட்சிசுந்தரனார் ஆத்மா முருகன் திருவடிகளிற் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.*

**க. சிவதாசக் குருக்கள்** **2004.05.08**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

கொக்குவிலைச் சேர்ந்த, மலேஷியாவிற் கப்டனாகப் பதவி வகித்த முத்துராஜா மீனாட்சிசுந்தரம் அவர்கள் அமரத்துவத்தை நினையு முகமாக மக்கள் சமுதாய த்திற்குப் பயன்பாடுடையதொரு நூலை வெளியிட அவர் பின்ளைகள் விரும்பினர். அந்த விருப்பத்தை எமக்குச் சொன்னார்கள். அபிப்பிராயங்கள் பல பரிமாறப்பட்டன. நிறைவாக, அவர்கள் வழிபாட்டுடனாகிய கொக்குவில் புதுக்கோவில் வரலாற்றை எழுதுவது என்று தீர்மான மாகியது. அந்த ஆலயத்துடனான தகவல்களைத் திரட்டினோம். கொக்குவில் ஓய்வு பெற்ற அதிபர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை அவர்களின் உதவியையும் பெற்றோம். மண்டபங்களிலுள்ள திருவுரு வங்கள் பிரகார சந்நிதிகள் பற்றி விரிவான செய்திகளையும் ஆலயத்தின் கிடைப்படம் ஒன்றினையும் தந்துதவினார்கள்.

ஆலயந் தொடர்பாக வெளிவந்த கும்பாபிஷேக மலர்கள், தேர்த்திருப்பணிமலர், பிரபந்தத்திரட்டுக்கள் என்று கிடைத்தவை பெரும் பயன்பாடுடையவையாக இருந்தன.

நிர்வாகத்திற்குத் துணையாகவிருந்த பரிபாலன சபை உறுப்பினர் விவரங்களையும் நடைபெற்ற கும்பா பிஷேகங்கள், அவற்றைச் செயற்படுத்திய அர்ச்சகர்கள், கும்பாபிஷேக நிர்வாகத்திற்குத் துணைநின்ற பரிபாலன சபையினர் விபரங்கள் என்பவற்றை நிறைவாக எழுதிக் கொள்ள முடியவில்லை. மற்றொரு வெளியீட்டில் இவை யும் நிறைவு செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழவுள்ள எத்தனையோ நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த எமது ஆக்கத்தையும் வாசித்துப் பொருத்தமானதொரு அணிந்துரையைக் கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம் அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி அதிபர் திரு. ந. கணேசலிங்கம் அவர்கள் அமரத்துவமெய்திய முத்துராஜா மீனாட்சிசுந்தரம் பற்றியதொரு நிறைவான வாழ்க்கை வரலாற்றைத் தந்துதவியுள்ளார்கள்.

கொழும்பு கீதா பதிப்பகத்தினரின் கலைவண்ணம் இந்த நூலிலும் ஒளிர்கின்றது.

இந்த நூலின் உயர்விற்காக உழைப்பு வழங்கிய அனைவர்க்கும் கொக்குவில் புதுக்கோவில் முருகன் திருவருள் என்றும் கிடைப்பதாக

**சி. அப்புத்துரை**
மயிலங்கூடல்,
இளவாலை,

கொழும்பில்
18/1 9th Lane
Wasala Road
Colombo -13
Sri Lanka

Tel : 2341083.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாநில
முன்னாள் கல்விப் பணிப்பாளர்
கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம் அவர்கள்
வழங்கிய

# அணிந்துரை

வரலாற்று அறிவோடு, வரலாற்று உணர்வும் ஒருவரிடம் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். எமது பண்பாடு, கலாசாரம், விழுமியங்கள் என்பவற்றைப் பேணுவதற்கு அவை தூண்டுதல்களாக அமைகின்றன.

யாழ்ப்பாணக் கலாசாரம் என்பது கந்தபுராண கலாசாரம் என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கூறுவார். கந்தபுராண கலாசாரம், ஒரு வாழ்க்கை நெறி. அதைக் கடைப்பிடித்து வாழ்தலே, வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் என வள்ளுவரும், மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தல் என ஞான சம்பந்தரும் வகுத்த வாழ்க்கை இலக்கணத்திற்கு இயைந்த நடைமுறை வாழ்வாகும்.

கந்தபுராண கலாசாரத்தின் ஊற்றுக்கண் கோவில் என்றால் மிகையாகாது. யாழ்ப்பாணக் கோவில்களில் ஆண்டுதோறும் மூன்றுமாத காலம், கந்தபுராணம் படித்துப் பயன்சொல்லும் வழக்கம் இருந்து வருவது குறிப்பிடத் தக்கது. அதனால் படிப்பைக் கேட்போர் மத்தியிற் கந்த புராண கலாசாரம் மலர்ச்சி பெற்று வந்தது. ஊருக்கூர் கோவில்கள் ஒன்றல்லப் பல உள்ளன. மக்களின் சமய, ஆன்மிக, சமூக, பண்பாட்டு மேம்பாட்டிற்கு ஆதாரமாகவும் கேந்திர நிலையங்களாகவும் கோவில்கள் விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்களின் வரலாற்றுச் சிறப்பையும் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புக்களையும் எடுத்தியம்புவதற்கெனத் தல புராணங்கள் எழுந்தன.அவை செய்யுள் வடிவில் அமைந்துள்ளமையினால் அவற்றைப் படித்து விளங்கிக் கொள்வது எல்லோருக்கும் இயலக்கூடியதன்று. எனவே, வசனநடையில், தல வரலாற்று நூல்கள் உருவாக்கப்பட வேண்டிய தேவை உணரப்படலாயிற்று. அந்த வகையில் எழுந்த ஒரு நூல், கொக்குவில் அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோவில் (புதுக்கோவில்) வரலாறு என்னும் இந்நூலாகும். இதனை, எல்லாவிதத்திலும் தகுதி யுடைய, கலாபூஷணம், பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் எழுதியுள்ளமை முருகப்பெருமானின் சித்தம் என்றே கூற வேண்டும்.

அமைவிடம், தோற்றம், ஆலயத்திற்கான நில அமைவு, கோயில் அமைவு, ஆலய நிர்வாகம், புராணப் படிப்பு, அலங்கார உற்சவமும் அறுபத்து மூவர் வழிபாடும், கொடிமரத்தாபிதமும் மஹோற்சவமும், கும்பாபிஷேகம், அரசிற் பதிவாதல், நிரந்தர வருவாய்க்கான ஆக்கம், அர்ச்சகர் மரபு, திருவிழாக்கள், வாகனங்கள் ஆகிய உபதலைப்புக்களில் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புகளும், வரலாற்று விடயங்களும் மற்றும் பரிபாலனம், நித்திய நைமித்தியங்கள் என்பனவும் உள்ளடக்கப் பட்டுள்ளமை நூலுக்கு அணிசெய்வதாய் உள்ளது. நல்ல தமிழில் நயமாக எழுதப்பட்டிருத்தல் மற்றொருசிறப்பு.

இந்நூலில், சைவப்புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை எழுதியுள்ள புதுக்கோவில் திருவுருவங்கள் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை சத்தும் சாரமும் மிகுந்ததாக உள்ளது. வேறு சில சுருக்கக் குறிப்புகளும், அருளாளர்களால் புதுக் கோவில் முருகன் மீதும் மற்றும் மூர்த்திகள் மீதும் பாடப் பெற்ற திருவூஞ்சல் பாக்களும், கீர்த்தனங்களும் நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்நூல், கொக்குவில் முருகபக்தர் முத்துராஜா மீனாட்சி சுந்தரம் அவர்களின் நினைவாக, அன்னாரின் அந்தி யேட்டித்தின வெளியீடாக, அவரது துணைவி, பிள்ளைகள் மற்றும் மருமக்கள் என்பவர்களால் வழங்கப்படுகிறது. இது போற்றுதற்குரிய கைங்கரியமாகும். கப்டன் சுந்தரம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைத் திரு.ந.கணேச லிங்கம் நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

நினைவுமலரில், இவ்வாறான காத்திரமான விடயங் கள் இடம் பெறுவது, புதுமையானதும் வரவேற்கப்பட வேண்டி யதுமான அம்சங்கள் ஆகும். அருள் மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் கிருபாகடாட்சம் எல்லோருக்கம் கிட்டுவதாக.

**குமாரசாமி சோமசுந்தரம்**
20.05.2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகோவில் (புதுக்கோவில்) வரலாறு

**அமைவிடம்:**

யாழ். கொக்குவிற் பதியில் கொக்குவிற் புகையிரத நிலைய வீதிச்சந்திக்கு வடக்கே, காங்கேசன்துறை யாழ்ப்பாணம் வீதியின் கிழக்கே வீதி ஓரமாக உள்ளதுதான் கொக்குவில் அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலாகும். இந்த ஆலயத்தின் வடக்கு வீதியின் கிழக்குப் புறமாகத்தான் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வாயில் அமைந்துள்ளது. கொக்குவில் மஞ்சவனப்பதி அருள்மிகு முருகன் ஆலயம் யாழ்ப்பாணம் காங்கே யன்துறை வீதியின் மேற்குப் புறத்தே அமைந்துள்ளது.

**தோற்றம்:**

புதுக்கோயில் என எல்லோர் வாயிலும் தவழும் கொக்குவில் அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் 1865ஆம் ஆண்டை மையமாகக் கொண்டு அதன் அண்மைக் காலத்தில் தோற்றியிருக்கலாம் என்று எண்ண வாய்ப்பிருக்கிறது. 1830 என்று பிரபந்தத்திரட்டு நூலில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. குறிப்பிட்ட அந்தக் கால கட்டத்தில் இந்தச் சூழலில் சைவவேளாளர் மரபினராகிய ஒரு பதினைந்து குடும்பத்தினரே வாழ்ந்திருந்தனர் என்று நம் உணர்விற் படுகின்றது. அன்றைய அந்தப் பதினைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத் தலைவர்களதும் சிந்தனைத் தெளிவுதான் - சிந்தனையின் விளைவுதான்- இன்று நாம் காணும் இந்தப் பெரிய புதுக்கோவிலாகப் பரிமளிக்கின்றது எனலாம்.

அந்தக் குடும்பத் தலைவர்கள் தமது சிந்தனையில் வந்த ஆலயம் ஒழுங்காக நடைபெறவேண்டுமென எண்ணினர். நாளும் வழிபட்டு அமைதி காண்பதற்கு அது வாய்ப்பாக அமையும் எனவும் நம்பினார்கள். அந்த அவர்களது சிந்தனையைச் செயற்படுத்தவல்லதொரு பஞ்சகர்த்தா சபையை மன உறுதியிற் சலனமில்லாத திரு. சண்முகம் முருகேசு என்பவர் தலைமையில் 1871 ஆம் ஆண்டிலிருந்து இயங்க வைத்தனர். திரு. வேலாயுதர் முருகேசு, திரு. சட்டநாதர் சின்னப்பு, திரு. சிறுத்தம்பு அம்பலவாணர், திரு. தாமோதரம்பிள்ளை என்போர் அச் சபையின் ஏனைய உறுப்பினர்களாய் இருந்திருக்கின்றனர்.

**ஆலயத்திற்கான நில அமைவு:**

தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சகர்த்தா சபையினர் ஆலயம் அமைப்பதற்கென ஒரு நிலத்தைக்கொள்வனவு செய்து அதனைத் தர்மசாதனமாக்கினர். அந்நிலத்தின் பெயர் 'நினைக்க முடிச்சான்' எனத் தோம்பின் 1786ஆம் இலக்கத்திற் பதிவிலுள்ளது. அதனுடன் பஞ்சகர்த்தா சபையின் தலைவர் திரு. சண்முகம் முருகேசு அவர்களும் தமது சொந்த நிலப்பகுதியை இந்தத் தர்மசாதனத்துடன் சேர்த்துள்ளார் என்ற செய்தி பின்னர் தெரிய வந்தது. பஞ்சகர்த்தா சபைத் தலைவர் தமது உபகரிப்பை அடக்கமாகத் தம்முடனேயே வைத்துக்கொண்டார். செய்தியறிந்து அவருள்ளத்துயர்வு கண்டு வியக்கின்றோம். அந்த மகானின் தெய்வ நம்பிக்கையும் சைவ வாழ்வுந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் இன்றைய பொலிவிற்கு, அருளாட்சிக்கு மூலம் எனல் குறைவுடைத்தாகாது.

தருமசாதனம் செய்யப்பட்ட நிலஅமைதி பற்றிய தொரு கருத்தும் எம் மனத்திடமாக வேண்டியது அவசியம். அந்தத் தருமசாதன நிலத்தில் முன்பொரு தீர்த்தக் கேணி இருந்ததென்னுந் தகவலைப் பழைய எழுத்து மூலங்களிற் காணுகின்றோம். அந்த இடத்திலேதான் இன்றுள்ள தீர்த்தக் கிணறு அமைந்துள்ளதென்றும் அறிகின்றோம். அல்லா மலும் அந்த நிலப்பகுதியில் முன்பு ஒரு மடம் இருந் திருக்க வேண்டுமென்றும் அதனை ஆடிய பாதன் மடம் என்று அழைத்தனர் என்றும் கர்ண பரம்பரைச் செய்திகள் உண்டு. அதனாலேதான் அந்த நிலப்பகுதியை ஆடியா மடத்தடி என்றும் ஆடிய பாதன் மடத்தடி என்றும் இன்றும் சிலர் குறிப்பிடுகின்றனர். இந்தவகையிலான செய்திகள் அந்த மண்ணின் தெய்வீக பரிணமிப்பைச் சிந்திக்க வைக்கின்றன. தெய்வீகப் பொலிவுடனான மண்ணில் புதுக்கோவில் அமைந்தமையாலேயே அது இடையூறாம் பல தாக்கங்களெனுந் திருவிளையாடல்களுக்கு உள்ளா கியும் அருளாட்சியில் உயர்ந்து கொண்டேயிருக்கிறது என்று சிந்திக்க வாய்ப்பிருக்கிறது.

**கோயில் அமைவு:**

பஞ்ச கர்த்தா சபைத் தலைவர் திரு. சண்முகம் முருகேசு அவர்களின் அயரா உழைப்புக் காரணமாகக் குறிப்பிட்ட நிலத்திற் புதுக் கோயிலுக்கான கால்கோள் நிகழ்வுகள் ஆரம்பித்துத் தொடர்ந்து கர்ப்பக்கிருகம், மேல் விமானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம் என்று அமைதி கண்டன. தென்மேற்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகருக்கான சந்நிதியும் வடக்கில் திருமஞ்சனக் கிணறும் அமைக்கப்பெற்றன.

திருப்பணி வேலைகள் மேலும் தொடர்ந்தன. அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி மீது ஆராமை மிகுதியினாற் பலபிரபந்தங்களைப் பாடியுள்ள திரு. ச. சபாரத்தின முதலியார் அவர்கள் பஞ்சகர்த்தா சபை உறுப்பினராகிய திரு. தாமோதரம்பிள்ளையுடனாகித் தம்ப மண்டபத்தை நிறைவு செய்கின்றார். ஆலய அமைவிற்கு ஆரம்ப கருத்தாவாகி நின்ற திரு. சண்முகம் முருகேசு அவர்களின் துணைவியார் திருமதி பறுவதம் முருகேசு அவர்கள் கணவனாரின் வழியில் நின்று சுற்றுமதிலை நிறைவாக்குகின்றார்கள்.. அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் திருவருளில் தோய்ந்து நின்ற திரு. ச. சபாரத்தின முதலியார் அவர்கள் வசந்த மண்டபத் திருப்பணியை ஆரம்பித்து நிறைவு காண்கிறார்கள். வைரவமூர்த்தி பிரதிட்டை ஆ. குட்டித்தம்பி அவர்களாலும், பரிவார சந்நிதி உள்ளாக நவக்கிரகப் பிரதிட்டை திரு. இராமலிங்கம் ஆறுமுகம் அவர்களாலும், பரிவார சந்நிதி உட்பட வேணுகோபாலமூர்த்தி பிரதிட்டை திரு. செ. இரத்தினப்பிரகாசம் அவர்களாலும், பரிவார சந்நிதி உள்ளாக ஆறுமுகசாமி பிரதிட்டை உள்ளூரிலும் மலேஷியாவிலும் பணம் சேகரித்த திரு. சு. காசிப்பிள்ளை அவர்களாலும் நிறைவு செய்யப்பட்டன. உற்சவ மூர்த்திகளுள் சுப்பிரமணியர் திரு. சண்முகம் முருகேசு அவர்கள் உபயமாகவும், விநாயகர் திரு. சு. காசிப் பிள்ளை அவர்கள் உபயமாகவும், பாலசுப்பிரமணியர் திரு. வேலாயுதர் முருகேசுவின் உபயமாகவும் பெறப்பட்டுள்ளன.



01 DEC 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தக் கிணற்றின் அருகாமையிலுள்ள தண்டாயுத பாணி சந்நிதி திரு. பொ. அப்பாத்துரை அவர்கள் உபய மாகும். பிரதிட்டை செய்யப்பட்ட மூர்த்தி திருமதி இராசரத்தினம்மா சீனிவாசகம் அவர்கள் உபயம். கோவில் முதலாவது வீதி மூன்று பக்கக் கொட்டகையும் திரு. வை. சின்னத்தம்பி அவர்கள் உபயம். ஆரம்பத்திலேயே அமைதி கண்ட மடைப்பள்ளிக் கிணறு திரு. சு. சங்கர சிவம் அவர்கள் உபகரிப்பு. வாகனசாலை குகதாசர் ச. சபாரத்தின முதலியார் உபகரிப்பின் மூலம் உருவாயது. 1962இல் கண்டாமணி ஒன்றினை வழிபடுவோர் கொள்வனவு செய்து உபகரித்தனர்.

புதிதாக அமைக்கப்பட்ட மகாலக்குமி சந்நிதி திரு. முருகதாஸ் சுப்பிரமணியம் குடும்பத்தினரின் உபயமாகக் கிடைத்துளது. முத்துக்குமாரசுவாமிக்கு திரு. பொன்னம் பலம் தேவராஜா குடும்பத்தினரின் உபகரிப்பாகப் புதியதொரு சந்நிதி கிடைத்துளது. தெட்சணாமூர்த்தி எழுந்தருளி அருள்பாலிக்கும் மாடக்கோபுர அமைப்பும் ஸ்தாபிதமும் திரு. வை.சி. அம்பிகாபதி குடும்ப உபகரிப் பாகும். திரு. வை.சி. சிவகுரு குடும்பத்தினர் திரு. வை.சி. அம்பிகாபதி குடும்பத்தினருடனாகி உட்பிரகாரத்தின் நாற்புறங்களிலுமுள்ள ஓட்டுக் கூரைகள் முழுவதையும் பெரும் பொருட் செலவில் திருத்தியமைத்துதவினார்கள். கோயில் அர்த்த மண்டபம் முதல் மகா மண்டபம் வரை ஒன்பதடி உயரத்தில் மூடுசாந்திடப்பட்ட கூரை அமைப்பு, தம்ப மண்டபத் தூண்கள் புதுப்பிக்கப்பட்டுக் கூரைத் திருத்தம், கோவில் வாயில் மண்டபக் கூரையை இறக்கி அகட்டியமைத்த பாரிய பணி எல்லாம் குகநேயச் செல்வர் களின் குளிர்ந்த உள்ளக் கோலாகலத்துடன் நிறை வானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி பூப்பிள்ளை நடராஜா குடும்பத்தினர் 2001 பங்குனி உத்தரத்தன்று வள்ளி தெய்வானை சமேத முருக மூர்த்தி புதிய உற்சவமூர்த்திகளை உபகரித்துள்ளனர்.

**ஆலய நிர்வாகம்:**

1871இல் ஆரம்பிக்கப்பட்ட பஞ்சகர்த்தா சபைத் தலைவர் திரு. சண்முகம் முருகேசு அவர்கள் வழிபடுவோரின் ஆதரவுடன் ஆலய நித்திய நைமித்தியக் கிரியைகளைச் செவ்வனம் நடைமுறைப்படுத்தி வந்தார். நாளுந் திருவலகிடுதல், கழுவுதல், திருவிளக்கேற்றுதல் முதலான சரியைத் தொண்டுகளையும் அவர்களே செய்து வந்தார்கள். அவரைத் தொடர்ந்து சைவாசார சீலராக விளங்கியவரும் பிரபந்த நூல்களின் ஆக்க நாயகருமாய திரு. ச. சபாரத்தின முதலியார் அவர்கள் முன்னையவரின் அடிச்சுவட்டின் வழிநின்று கோயிற் கிரியைகளை நாளாந்தம் நடைபெறச் செய்தார். முதலியாரின் வழிகாட்டால் கிடைக்க முடியாது போன சூழ்நிலையில் கோயிற் குருக்களே வழிபடுவோர் அனுசரணையுடன் நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். பூசனை முறையாக ஒழுங்காக நடைபெறுவதற்கு ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்டதுமுண்டு. அந்தவேளை முருகனடியார்கள் வீடுதோறும் பிடியரிசிக் குட்டான்களிலே நாளும் பிடியரிசி சேமித்து அதைப் பின்னர் பணமாக்கிக் கிரியைகள் இடையீடின்றி நடைபெற உதவியுள்ளார்கள். 'நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்ல வல்லக் கொல்லவல்ல' என்ற உண்மையை உணர்ந்த முருகனடியார்கள் தம்மால் முடிந்தளவு உதவிக் கோயிற் கிரியைகள் சோர்வடையா வண்ணம் பார்த்துக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து திரு. விசுவலிங்கம், திரு. முத்துத்தம்பி, திரு. ஞானசுந்தரம், திரு. இராசரத்தினம், திரு. மாணிக்க வாசகர், திரு. விநாசித்தம்பி, திரு. சின்னத்தம்பி காசிப் பிள்ளை, திரு. சிற்றம்பலம், திரு. செ. நடராசா, திரு. த. சதாசிவம் என்போர் அவரவர் காலத்துப் பரிபா லன சபைகளை அமைவுறச் செய்து கிரியைகளை ஒழுங் காக நடைபெறச் செய்தனர். இந்தவேளை பணத் தொடர்பு சம்பந்தமான விடயங்களை திரு. ந. மருதப்பு என்னும் நம்பிக்கை நிதியப் பொறுப்பாளர் கவனித்து வந்தார்.

**புராணப்படிப்பு:**

ஒழுங்கான கோவிலமைப்புக் கைகூடிய 1927ஆம் ஆண்டை அண்மிய காலத்திருந்து கந்தபுராணப்படிப்பு உரிய காலக்கிரமத்திற்கமைவாக இந்த ஆலயத்தில் நடைபெற்று வருகின்றது. சைவப்பெரியார் திரு. ச. சபா ரத்தின முதலியார், திரு. ஐயாத்துரை, திரு. கந்தப் பிள்ளை, திரு. மருதப்பு, திரு. செல்லத்துரை, முதலியோர் இந்தக் கந்தபுராணப் படிப்பிலே முன்னின்றவர்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டியது.

**அலங்கார உற்சவமும் அறுபத்துமூவர் வழிபாடும்:**

கொடித்தம்பம் தாபிதமாவதற்கு முன் வருடந்தோறும் அலங்கார உற்சவம் சிறப்பாக நடைபெற்றுவந்ததுண்டு. அறுபத்து மூவர் குருபூசைத் தினங்கள் மாதாந்தம் வரும் நட்சத்திர சுபதினத்தில் நடத்தப்படுவதுண்டு. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் என்னுஞ் சமய குரவர் வழிபாடு கூட்டுப் பிரார்த்தனை, சைவாசாரசீலர்களது பேச்சு, மாணவர் சிந்தனைகளுடனாகி நிறைவுறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொடிமரத் தாபிதமும் மஹோற்சவமும்:**

சிவத்திரு பத்மநாதபிள்ளை அவர்களது இடையீடற்ற உழைப்பின் மிகுதியால் அடியவர்களின் மனம் நிறைந்த உதவியுடன் 1927இல் கொடித்தம்பத் தாபிதம், யாகசாலை அமைப்பு என்பவை நிறைவாகின. இரதோற்சவத்திற்கான தேரும் அமைதி பெறுவதாயிற்று. குறிப்பிட்ட இந்தத் திருப்பணிகள் நிறைவெய்தியதும் மஹோற்சவம் தொடங் கப்பட்டது. தீர்த்தோற்சவம் வைகாசிப் பௌர்ணமியில் நடைபெறக்கூடிய வகையில் பத்துநாள் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பித்துத் தொடரும் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் பிரதம அர்ச்சகர் சிவஸ்ரீ வைத்திய நாதக் குருக்களாலேயே முதன்முதலாகக் கொடியேற்றி வைக்கப்பட்டது. அன்று தொடக்கம் கொடியேற்றம், மாம் பழத் திருவிழா, சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த் தோற்சவம், பூங்காவனம் என்ற விசேட நிகழ்வுகளுடன் மஹோற்சவம் வைகாசி மாதத்திற் பத்துத் தினங்கள் நடைபெறுவதுண்டு. தீர்த்தோற்சவத்தைத் தொடர்ந்து பூங்காவனம் வயிரவர் பொங்கல் என்பனவும் நடைபெறும் வழக்கினை இங்கு காணமுடியும்.

**கும்பாபிஷேகம்:**

கொக்குவில் அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் முதலாவது மஹாகும்பாபிஷேகம் 1875ஆம் ஆண்டிற்கு முன்பாக நடைபெற்றிருக்கலாம் என்று சிந்திக்க வேண்டி இருக்கிறது. அதுபற்றிய குறிப்பெதுவுங் கண்டுகொள்ளக் கூடியதாக இல்லை.

பிரபல வாக்கிய பஞ்சாங்க கணித ஆசிரியர் சிவஸ்ரீ இரகுநாதையர் தலைமையில் விநாயகர், வள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வயானை சமேத சுப்பிரமணியர் பிரதிட்டை செய்யப் பட்டும் ஒரு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இது முதன் முதலாக நடைபெற்ற மஹாகும்பாபிஷேகமா என்பது தெளிவாக்கப்பட வேண்டும்.

பின்னர் சிதைவுகளுக்குள்ளான கட்டிடங்கள் செப்ப னிடப்பட்டு 1966.03.31 பங்குனி உத்தர நட்சத் திரத்தில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நடந் திருக்கிறது.

போர்க்கால அசம்பாவிதங்களால் எங்கள் ஆலயம் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியது. இந்திய அமைதி காக்கும் படையணியினரின் பொருத்தமற்ற நடவடிக்கைகளினால் 1987 - 1990 காலப் பகுதியில் ஆலயம் பெருஞ் சிதைவு களுக்குள்ளாகியது. முருகனடியார்கள் சோர்ந்துவிட வில்லை. ஆலயம் புனர்நிர்மாணத்திற்குள்ளாகியது. 1998 ஏப்ரல் 10ஆந் தேதி பங்குனி உத்தர நாளன்று புனராவர்த் தன மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. திரு. த. பொன்னம் பலம் அவர்களைத் தலைவராகவும், திரு. ச. லோகேஸ்வரன் அவர்களைச் செயலாளராகவும் திரு. சி. அம்பிகாபதி அவர்களைப் பொருளாளராகவுங் கொண்ட பரிபாலன சபையினரே இந்தக் குடமுழுக்கு விழாவை நெறிப் படுத்தினர். தொடர்ந்து நித்திய நைமித்திய நிகழ்வுகளும் ஒழுங்காக நடைபெறுகின்றன.

**அரசிற் பதிவாதல்:**

நல்ல சிந்தனைத் திறம் பெற்ற முருகனடியார்கள் சிலரது இடையீட்டற்ற முயற்சியால் ஆலயம் அதன் உரிமை கள், அசையும் சொத்துக்கள், அசையாச் சொத்துக்கள் அனைத்தும் ஆலய நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள பரிபாலன சபையின் உடமைகளென்றும் பரிபாலன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையின் பரிபாலிப்பிலேயே அவை இருக்க வேண்டு மென்றும் பொதுச் சபையிலே சட்டவாக்கங்களைச் செய்தனர். அந்தச் சட்டவாக்கங்கள் நடைமுறை விதிகள் என்பவற்றுடனாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அனுமதியுடன் 1962ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 30ஆம் திகதி கோவிற் பரிபாலன சபைச் சட்டத்தின் கீழ் இலக்கம் §.149இற் பதிவாகியுளது.

**நிரந்தர வருவாய்க்கான ஆக்கம்:**

ஆலயத்திற்குத் தொடர்ந்து வருவாய் கிடைத்துக் கொண்டிருந்தால் ஆலயக் கிரியைகள் இடையறவுபடாது ஒழுங்காக நடந்துகொண்டிருக்குமே என்ற முன் யோசனையுடன் 1962ஆம் ஆண்டு திருமதி வள்ளியாச்சி சின்னத்துரை அம்மையார் கோயிலின் வடக்கு வீதியில் ஐயாயிரம் ரூபா செலவில் ஒரு கடைக்கட்டிடத்தைக் கட்டிக் கோவிலுக்கு உபகரித்தார்கள். இந்தத் தனிமனித சிந்தனை ஆலய பரிபாலன சபை உறுப்பினர் மனதை உறுத்தியது. அதன் விளைவாக 1972இல் அடியார்கள் பேராதரவுடன் இருபத்து மூவாயிரம் ரூபா செலவில் யாழ்ப்பாணம் காங்கேயன்துறை வீதியில் பல கடைக் கட்டிடங்களை உருவாக்கி வாடகைக்கு விட்டு ஆலய நிரந்தர வருவாயைப் பெருக்கியுள்ளனர்.

**அர்ச்சகர் மரபு:**

கொக்குவில் அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய முதற் பூசகராகியிருந்த பெருமை சிவஸ்ரீ சின்னப்பா ஐயர் அவர்களையே சாரும். கோயிற் கிரியைகளுடன் கோவிலைச் சார்ந்த குடும்பங்களின் வீட்டுக் கிரயைகளையும் ஏற்றுச செய்யும் புரோகிதராகவுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப் போக்கிலே அவர் மாற்றம் பெற்றுவிட்டார். பின்னர் அந்தக் கிரியைகளைத் தன் தம்பியாகிய சிவஸ்ரீ ஐயாத்துரை ஐயரிடம் ஒப்படைத்துவிட்டார். சிவஸ்ரீ சின்னப்பா ஐயர் அவர்களைத் தொடர்நது அவர் மருமகன் சிவஸ்ரீ இராசரத்தினக் குருக்கள் ஆலய அர்ச்சகராக அமர்ந்தார். அவர்கள் குடும்பத்தினரே தொடர்ந்து அர்ச் சகராகிப் பணிபுரிந்திருக்கின்றனர். இந்த வரன் முறையில் சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களின் பின் பொருத்தமானவர் ஒருவர் அர்ச்சகராகக் கிடைக்காது போனமை எமது துர்ப்பாக்கியமே. அந்தவேளை அமைந்த பரிபாலன சபையினர் தம் நிர்வாகத் திறமையால் அர்ச்சகர் குறைபாட்டைப் பெரிதுபடுத்தாது எல்லாவற்றையும் நிறைவு காணும் வழியைச் செயற்படுத்தினர். 1982ஆம் ஆண்டிலிருந்து சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் பரம்பரையினரே கோயிற் பூசைகளைப் பொறுப்பேற்றுச் சிறப்புறச் செய்து வருகின்றனர்.

**திருவிழாக்கள்:**

**சித்திரை**

வருடப்பிறப்பு
நடேசரபிஷேகம்
திருநாவுக்கரசர் குருபூசை
கார்த்திகை உற்சவம்

**வைகாசி**

கார்த்திகை உற்சவம்
கொடியேற்றம்
மாம்பழத்திருவிழா
சப்பறத் திருவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரதோற்சவம்
பௌர்ணமி தீர்த்தோற்சவம்
கொடியிறக்கும்
பூங்காவனம்
வயிரவர் பொங்கல்
திருஞானசம்பந்தர் குருபூசை

**ஆனி**

கார்த்திகை உற்சவம்
மாணிக்கவாசகர் குருபூசை
நடேசரபிஷேகம்
ஆனி உத்தரம்

**ஆடி**

கார்த்திகை உற்சவம்
நடேசரபிஷேகம்
சுந்தரர் குருபூசை

**ஆவணி**

கார்த்திகை உற்சவம்
கிருஷ்ண ஜெயந்தி
விநாயக சதுர்த்தி
நடேசரபிஷேகம்

**புரட்டாதி**

புரட்டாதிச் சனிக்கிழமைகள்
நவராத்திரி
கார்த்திகை உற்சவம்
நடேசரபிஷேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐப்பசி**

தீபாவளி
கந்த ஷஷ்டி
திருக்கார்த்திகை
சூரசம்ஹாரம்
திருக்கல்யாணம்
ஐப்பசி வெள்ளிக்கிழமைகள்

**கார்த்திகை**

கார்த்திகை உற்சவம்

**மார்கழி**

திருவெம்பாவை
கார்த்திகை உற்சவம்
சுவர்க்கவாயில் ஏகாதசி
திருவாதிரை

**தை**

தைப்பொங்கல்
தைப்பூசம்
சண்டேசர் குருபூசை
கார்த்திகை உற்சவம்

**மாசி**

நடேசரபிஷேகம்
மஹா சிவராத்திரி
கார்த்திகை உற்சவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி

கும்பாபிஷேக தினம்

கார்த்திகை உற்சவம்

குறிப்பு : *வைகாசிப் பூரணையிற் தீர்த்தம் என்பதால் கொடியேற்றம் முதலான சிலவிழாக்கள் சித்திரையிலும் கொடியிறக்கம் பூங்காவனம் முதலியன ஆனியிலும் நடைபெறலாம்.*

**வாகனங்கள்:**



மயில்வாகனம், அன்ன வாகனம் இரண்டும் முருகன் ஊர்திகளாகப் பயன்படுகின்றன. எலி வாகனமும் யானை வாகனமும் விநாயகன் ஊர்திகளாக உள்ளன. ஆட்டுக் கடா சூரன் போரின் போது உபயோகமாகின்றது. இடப வாகனமும் பயன்பாடுடையதாக உள்ளது. இரட்டைக் குதிரை வாகனம் மகோற்சவ காலத்தின் சப்பறத் திரு



University ... 0 1 DEC 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

704396

விழாவிற்கு முதல்நாள் திருவிழாவின் போது பயனுடைய தாகின்றது. சூரன் பெரியதொன்று உண்டு. அதை இன்றுள் ளவர்கள் தூக்கி உரிய முறைப்படி கையாள்வது கடின மானது. இப்பொழுது சிறியதொரு. பாரங்குறைந்த சூரனை உபகரித்துள்ளனர். அதுவே சூரன் போர் நிகழ்வின் போது பயனுடையதாகின்றது.

**இன்றுள்ள பரிபாலன சபை:**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | - |
| உபதலைவர் | : | செ. மதனசுரேந்திரன் |
| செயலாளர் | : | தி. ஞானசுந்தரன் |
| உப செயலாளர் | : | - |
| பொருளாளர் | : | சி. அம்பிகாபதி |
| உப பொருளாளர் | : | சி. ராஜேந்திரம் |
| உறுப்பினர்கள் | : | த. ஸ்ரீஸ்கந்தராசா |
| | | செ. சூரியகுமாரன் |
| | | ச. யோகேந்திரன் |
| | | க. மாணிக்கவாசகர் |
| உள்ளகக்கணக்காளர் | : | க. பாலாபரணம் |

*தகவல் : செ. மதனசுரேந்திரன் - உபதலைவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கோவில் திருவுருவங்கள்

– சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை –

புதுக்கோவில் என்றழைக்கப்பெறும் கொக்குவில் அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் கொக்குவிற் கிராமத்தின் நடுவில் யாழ்ப்பாணம் காங்கே யன்துறை வீதியின் கிழக்குப்புறமாக அமைந்துள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை என்பவை முறையே இடமும் வலமுமாக உள்ளன. அதாவது வடக்கிலும் தெற்கிலும் உள்ளன. ஆலயம் கிழக்கு நோக்கிய சந்நிதி.

இக்கோவிலின் கர்ப்பக்கிருகத்துள் வள்ளி தெய்வ யானை சமேதராக அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணியர் சிலா விக்கிரமாக அமைந்து அருள்பாலிக்கின்றார்.

அடுத்து, மகாமண்டபத்திலே தெற்கு நோக்கிய விமானத்துடன் கூடிய கிருகத்துள்ஆறுமுகசுவாமியாகிய சண்முகர் மயிலின் மீதமர்ந்த உருவினராகத் (பெரியது) தனித்தனி வள்ளி தெய்வயானை இருமருங்கும் மிளிர ஐம்பொன்னாலாய எழுந்தருளி வடிவில் விளங்குகிறார். மிக அண்மையில் ஐம்பொன் வார்ப்பு மூலம் செய்யப்பெற்ற புதிய வள்ளி தெய்வயானை சமேத முருகன் எழுந்தருளி யும் அங்கே வைக்கப்பட்டுளது. இம்மகா மண்டபத்திலேயே உள்ளே செல்லும் நுழை வாயிலின் இடப்புறத்தே (வடக்கு) நாகதம்பிரான் சிலா விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டுள் ளது. இம்மண்டபத்திலேயே நாகதம்பிரானுக்கு முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கு நோக்கிச் சண்டேசுரருடைய எழுந்தருளி மூர்த்தி தூணருகே பீடத்தில் வைக்கப்பட்டுளது.

மகாமண்டபத்தின் முன்னுள்ள மண்டபத்திலே வடக்கே விமானத்துடன் கூடிய கிருகத்துள் எழுந்தருளி மூர்த்திகளான விநாயகர், முத்துக்குமாரசுவாமி, சக்திகளுடன் மயூராரூடர் சக்திகளுடன் வேணுகோபாலர் ஆகிய திருவுருவங்கள் காட்சி தருகின்றன. தம்ப மண்டபத்திலே மயூரமும், பலிபீடமும், தம்ப விநாயகரும், எங்கும் போல் சிலாவிக்கிரகமாக அமைந்திருப்பதைக் காணலாம்.

உள்வீதியிலே வலமாகத் தென்புற வாயிலுக்கு மேற்கிலே வடக்கு நோக்கிப் பண்டிகையுடன் கூடிய கிருகத்துள் சைவசமய குரவர்களாகிய நால்வர் எழுந்தருளிகளாய திருவுருவங்களும் தாபிதமாகியுள்ளன. நிருதி மூலையில் உரிய இடத்தில் விநாயகர் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளார். வடமேற்கு மூலையில் மகாலட்சுமி, வேணுகோபாலர், சிலாவிக்கிரகங்கள் விமானத்துடன் கூடிய தனித்தனி கிருகத்துள் கிழக்கு நோக்கிப் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளனர். வடக்கில் வசந்த மண்டபத்திற்கு மேற்குப் புறமாகப் பண்டிகையுடன் கூடிய கிருகத்துள் சிவகாமசுந்தரி சமேத நடராசப் பெருமான் அழுதடியடைந்த அன்பராம் மாணிக்கவாசகர் திருவுருவுடன் தென்திசை நோக்கித் திருநடஞ் செய்துகொண்டிருப்பதைக் கண்டு களிக்கலாம்.

மற்று உட்பிரகாரத்திலே உரிய இடத்திலே வைரவப் பெருமானுக்கும் நவக்கிரகங்களுக்கும் சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதே போல் கர்ப்பக்கிருகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கியபடி திருமஞ்சனக் கிணற்றுக்கு மேற்கே சண்டீசர் எழுந்தருளியுள்ளார்.

அண்மைக்காலத்தே புதிதாக அமைக்கப்பெற்ற தெட்சணாமூர்த்தி (சிலாவிக்கிரகம்) சந்நிதியும், ஐம்பொன் உரு பாலசுப்பிரமணியர் (ஐம்பொன் விக்கிரகம்) சந்நிதியும் பண்டிகையுடன் கூடியவையாகக் கர்ப்பக் கிருகத்தின் தெற்கிலும் மேற்கிலும் முறையே அமைக்கப்பட்டுள்ளன.

இனித் தேரோடும் இரண்டாம் வீதியுள் நுழைவோம். தெற்கு வீதியில் சண்முகர் சந்நிதிக்குச் சற்றே மேற்குப் பக்கமாக வடக்கு நோக்கிப் பழனியாண்டவர் கோவில் தீர்த்தக் கிணற்றுக்குக் கிழக்காக முகப்பு மண்டபத்துடன் அழகாக விளங்குகின்றது.


தேர்முட்டியின் மேற்குப்புறச் சுவருடன் கூடியதான சிறு பண்டிகையுடன் அமைந்த கிருகத்துள் தேரடி வைரவராக முத்தலைச் சூலம் தாபிதமாகியுள்ளது.

கடந்த 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின் புதுக்கோவிலிற் பல திருப்பணி வேலைகள் அன்பர்க ளாலும் அடியவர்களாலும் நிறைவுசெய்யப் பெற்றுள்ள மையை யாவரும் அறிவர். கடைசியாகத் தேரோடும் வீதி கல்பதித்துத் தார் ஊற்றிச் செப்பனிடப்பட்டது. இந்த ஆண்டு வைகாசி 11ஆம் திகதி 2004.05.24இல் கொடி யேற்றத்துடன் வருடாந்த மகோற்சவம் ஆரம்பித்துள்ளமை எல்லோர்க்கும் மகிழ்வைத் தரும் என்பதில் ஐயமில்லை. கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு இன்புறுதல் மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் அல்லவா! முருகன் அருளைப் பெற அவனை வாழ்த்தி வணங்குவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயக் கிடைப்படம்




1. கர்ப்பக்கிருகம் மூலவர்
2. சண்முகர்
3. நாகதம்பிரான்
4. சண்டீசர் எழுந்தருளி
5. முத்துக்குமாரசுவாமி எழுந்தருளிகள்
6. மயூரம்
7. பலிபீடம்
8. தம்பவிநாயகர்
9. நால்வர்
10. விநாயகர்
11. மகாலக்குமி
12. வேணுகோபாலர்
13. நடேசர்
14. பைரவர்
15. நவக்கிரகங்கள்
16. சண்டீசர்
17. தெட்சணாமூர்த்தி
18. பாலசுப்பிரமணியர்
19. பழனியாண்டவர்
20. தேரடி வைரவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில்

# கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோவில் மூல விமானம்



மூலமூர்த்தி உறையும் கருவறைக்கு மேல் அமைந்துள்ள இவ்விமானம் இக்கோவில் தோன்றிய காலந்தொட்டே அடிப்படையான மாற்றம் எதுவுமின்றி இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. விமானம் என்னுஞ் சொல் (வி + மானம்) விசேடமாக அளந்து அமைக்கப் பட்டது எனப் பொருள்படுவது. எல்லையில்லாத அகண்டா கார இறைவனை நாம் எமது சிற்றறிவிற்கு எட்டியவாறு எல்லைப்படுத்தி உருவத் திருமேனியில் வடித்து வழி படுகின்றோம். அவ்வாறே அண்டங்களுக்கு உள்ளேயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அப்பாலும் நிறைந்துறையும் அவ்விறைவனுக்கு உறை விடமாக அளந்து வரையறுக்கப்பட்ட ஆலயத்தையும் அமைக்கின்றோம். அதுவே விமானம் எனப்படுவது. விமானம் என்னுஞ் சொல் இறைவனுக்கு ஊர்தியான தேரையும் குறிக்கின்றது. எங்கும் பரந்து வியாபித்திருக்கும் இறைவனுக்கு எமது உடலும், இந்த உலகமும், இதனை உள்ளடக்கிய அண்டமும் எல்லாம் தேராகவே அமை கின்றன. அத்தேர் வடிவிலேயே கோவிலும் அமைக் கப்பட்டுகின்றது.

அடியிலே அகன்று பரந்த விமானம் படிப்படியாக ஒடுங்கிச்சென்று தனிச்சிகரமாய் முடிகின்றது. அது, உலகியல் விடயங்களில் ஈடுபட்டுப் பரந்துசெல்லும் தமது உள்ளம் படிப்படியாக ஒடுங்கிச் சென்று இறைவனோடு இரண்டறக் கலக்கும் கேவல நிலையை உணர்த்தி நிற்கின்றது. முருகப்பெருமானின் மூலக் கோவிலாக அமைந்து விளங்கும் இவ்விமானத்தில் அப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக மயில்மீது அமர்ந் திருத்தலையும், சுவாமிநாதனாகத் தந்தைக்கு உப தேசித்தல் போன்ற திருவிளையாடல்கள் புரிவதையும் சித்தரித்துக் காட்டும் உயிர்த்துடிப்புள்ள சுதைச் சிற்பங்கள் அமைந்து கண்ணுக்கும் கருத்துக்கும் நல்விருந்தளிக் கின்றன.

*நன்றி : தேர்த்திருப்பணி மலர். 1983.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி
கோவில் புதிய அறுகோண சித்திரத் தேர்-1983.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகப் பெருமானுக்கமைத்த அறுகோணத்தேர்

ஸ்தபதி கலாகேசரி ஆ. தம்பித்துரை

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயி லெழுபதினோ டெட்டு மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே.

எனக் கோயில் அமைப்பு முறைகளைப் பற்றி அப்பர் சுவாமிகள் அழகாகக் கூறியுள்ளார். 'கரக் கோயில்' என்பது தேர்வடிவமாகச் சக்கரங்களோடு அமைக்கப்பெற்ற கோயில் ஆகும். தேவதைகளின் இரதங்களின் (தேர்) அமைப்பு முறைக்கேற்பக் கோயில் கட்டடக் கலையை மத்தியகாலக் கலைஞர்கள் வளர்த்து வந்துள்ளனர்.

பிரம்மாவின் இரதமான வைராஜம், குபேரனது இரதமாகிய புஷ்பகம், சிவனது இரதமான கைலாசம், வருணனுடைய இரதமாகிய மானிகம், இந்திரனுடைய இரதமாகிய திரிவிஷ்டபம் என்னும் ஐந்துவித இரதங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் இருந்து பிரிந்து நாற்பத்தைந்து விதமான கோவில் களை அமைத்தனர்.

'சமராங்கன சூத்திரதானம்', 'சிவகுருவேதபத்ததி' ஆகிய நூல்கள் கோயில்களை மூன்று பிரதான பாணிகளாகப் பிரிக்கின்றன. அவை நாகரம், திராவிடம், வேஸரம் அல்லது வராடம் ஆகும். தேரின் அமைப்பு முறைகளிலும் இவை வழக்கிலிருந்து வருகின்றன. அதாவது சதுரவடிவமான தேரை 'நாகரம்' என்றும், எண்கோணவடிவான தேரை 'திராவிட' என்றும், வட்டவடிவமான தேரை வேஸரம் என்றும், அறுகோண வடிவினதான தேரை 'அந்திரம்' என்றும் சிற்ப நூல்கள் கூறுகின்றன. இவற்றைவிட அமைப்புமுறைகளைக் கொண்டு நபஸ்வன் பத்ரகம், பிரபாஞ்சன பத்ரகம், விதான பத்ரகம், பவன பத்ரகம், பிரஷத பத்ரகம், சந்திரக பத்ரகம், அநிலக பத்ரகம் எனவும் இரதங்கள் எழுவகையாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வேழு வகைகளுள் அறுகோண வடிவினதானது பிரபாஞ்சன பத்ரகம் எனப்படும். எனவே பிரபாஞ்சன பத்ரகம் என அழைக்கப்படும் அந்திரம் (அறுகோணம்) என்னும் மரபிலமையும் தேர் அழகன் முருகனுக்கு மிகவும் உகந்ததாகும். ஈழத்திலே முதன்முதலாக இம்மரபு முறையிலே அமைக்கப்பெற்றுள்ள தேர் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகோயில் (புதுக் கோயில்) தேர்தான் என்பதில் பெருமையடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகோணவடிவினதான இத்தேரின் சில்லுக்கு மேற்பட்ட பகுதிகள் கீழிருந்து மேலாக ஆறு பெரும்பாகங் களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன பூதஸ் தானம், சித்தூர் மட்டம், பேரூர் மட்டம், நராசனம், தேவாசனம், சிம்மாசனம் என்பனவாகும். இப்பாகங்கள் முகபத்திர வேலைப்பாடுகளுடன் மிளிர்வது இத்தேரின் மற்றுமோர் சிறப்பாகும். இம்முகபத்திர வேலைப்பாடு பூதஸ்தானம் தொடக்கம் கலசம் வரை செல்வது குறிப்பிடத்தக்கது. சித்தூர் மட்டம், பேரூர் மட்டம் ஆகியன வேண்டிய தெய்வாம்சச் சிற்பங்களினால் சித்திரிக்கப்பெற்றுள்ளன. இவற்றைவிட யாளிவரிமானம், குதிரை வரிமானம், சரபப்பட்சி வரிமானம், போதிகை வரிமானம் ஆகியனவும் வேண்டிய இடங்களை அலங் கரிக்கின்றன. ஈழத்திலே ஒரு புது மோடியாக மிளிரும் இச்சித்திரத் தேரில் 12 பெரிய யாளிகளும் 24 பவளக் கால்களும் இரு பெரிய குதிரைகளும் பொருத்தப் பெற்றுள்ளன. ஈழவளநாட்டின் முதலாவது அறுகோண வடிவினதான இச்சித்திரத்தேர் பூரணப்பொலிவுடன் நிறைவெய்திடத் திருவருள் பொலிவு நிறைந்த கிருபாகரப் பெருமான் அருள்பாலித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கூர்க் குமர கிருபாகரரூஞ்சல்

பண்டிதர், சைவப்புலவர் மு. சின்னத்தம்பி

அவர்களால் இயற்றப்பட்டது

காப்பு

சீராருங் கடப்பமலர்த் தெரியல் சூடிச்
சினத்தவுணர் மடியவொரு செவ்வே லேந்திக்
காராரு மலர்க்குழலி யணங்கின் யானை
கடிமணஞ்செய் திமையோர்தங் காவன் மீட்ட
பேராருங் குமாரனெழிற் பெம்மான் மீது
பெருகுமுயர்க் காதலினா லூஞ்சல் பாட
ஏராரும் பிரணவமே யிபமாய் வைகு
மீசனேநின் னிணையடிகள் காப்ப தாமே.

நூல்

ஓதுமுயர் நால்வேதங் கால்க ளாக
உரைபெருகு மாகமங்கள் விட்ட மாகப்
போதமிகு கலைகளெல்லாம் வடங்க ளாகப்
புகலுதவு மந்திரங்கள் பலகை யாக
நீதமிகு மாறெழுத்தே பீட மாக
நியமமெனு மாசனத்தே நிலவி வைகிக்
கோதகலு மன்பருறை கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல். 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலமா ருமையுடனே யிமையம் வைகி
மகிழும்போ தவுணர்செய் மாயங் கேட்டுச்
சங்கரனார் நயனங்கள் சொரியு மாறு
தழற்பொறிக ளறுமுகமா யொன்றாய்த் தோன்றிப்
பங்கயஞ்சேர் சரவணத்திற் பால னாகிப்
பார்மகிழத் தவழ்ந்தோடி யறுவர் மாதர்
கொங்கையமு துண்கோவே கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ருஞ்சல் 2

தளிர்மதியு ஞாயிறுநற் கவிகை தாங்க
நாதமொடு காலோன்வெண் கவரி வீச
வளர்நிதியின் செல்வனிழற் றுவச மேந்த
வானவரு மிந்திரனு முலகு முய்ய
ஒளிர்கதிர்வேல் கரமேந்தி நிலவி யோடி
யோங்கறொறுந் தாவிவிளை யாடுஞ் செல்வா!
குளிர்வதியுஞ் சோலைவளர் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ருஞ்சல். 3

அயினிலவு மபயகரங் கருணை காட்ட
அடிநோக்கு வரதகர மணைத்துக் காக்க
ஒயினில்வு கலாபமிசை யுலவி யோங்கி
யுலகுயர முக்கிரியை தானே தாங்கி
துயிலகலுந் தொண்டர்நிதந் துதித்து நிற்கத்
தூயவகங் கெழுமியிருந் தாடு மீசா!
குயிலுலவு காவுயருங் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ருஞ்சல். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தைமிகு சீர்பழனிக் குன்றின் மீதும்
விளங்குவெண் ணிமயமலைச் சாரன் மீதுங்
கந்தமிகு மேரகத்தி னுச்சி மீதுங்
கவினிலவ வோங்குபரங் குன்ற மீதுஞ்
சிந்தைமகி ழன்பர்துதி செந்தின் மீதுஞ்
சீரலைவாய் மீதும்நட மாடுஞ் செல்வா!
கொந்தலரு மாநிறையுங் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல். 5

ஏடுயரும் சரவணப்பூம் பள்ளி மேய
விறைவாவுன் னிணையடிக டஞ்ச மென்று
பீடுயரு மெய்யடியா ரிரந்து நிற்பப்
பெருகுமருள் நடனமதிற் கருணை பொங்க
நீடுயரு மெழிற்றெய்வ யானை யோடும்
நிலவுகுற வஞ்சிவள்ளிக் கொடியி னோடுங்
கோடுயருஞ் சூதமிகுங் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல். 6

அந்தழல்போன் மின்னுமணி மகுட மாட
ஆடகப்பொன் னாடையுடன் றண்டை யாடக்
கந்தணியு மாரமுமார் கடம்பு மாடக்
கரமேவு குந்தமொடு வேலு மாடச்
சுந்தரியும் வள்ளியுமாய்த் துலங்கி யாடத்
துரிதமுட னாடிவருஞ் சேயே! மாவின்
கொந்தலருஞ் சோலைமிகு கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ரூஞ்சல். 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுயரு மறுமுகங்க ளசைந்து தோன்றத்
தேசோங்கு மெழிற்கரங்க ளசைந்து தோன்ற
உருவுதிக ழுத்தரிய மசைந்து தோன்ற
ஒளியுதவு மணிமகுட மசைந்து தோன்றப்
பொருவரிய தேவியரு மசைந்து தோன்றப்
புகலுதவு வேலுடனே யாடு நாதா!
குருவருளாற் பீடுயருங் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ருஞ்சல். 8

அலைக்கவருஞ் சூர்முதலா மவுணர் மாய
வறுமுகமு மெழிலுருவுங் காட்டி யன்பர்
நிலைக்கமுத மாகியவாழ் வளித்த வீரா!
நிலவுமுயர் சேவடியே புகல தாகக்
கலக்கமுற மாட்டோமென் றடியா ரேத்தக்
கனகமணிப் பீடமதிற் பொலிந்து வைகிக்
குலைக்கமுகின் பழமுதிருங் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ருஞ்சல். 9

உளங்கெழுமி யாறெழுத்தின் பொருளு மாகி
யுயர்முனிக்குத் தீந்தமிழின் விளக்க மோதி
வளங்கெழுமிப் பிரமனுக்குப் போத நல்கி
வடிவேலாற் கிரவுஞ்ச மடியத் தாக்கிக்
களங்கெழுமிச் சூர்தடிந்தே யரண மாகிக்
கருங்குழலி யானைதனை மணந்த கோவே!
குளங்கெழுமி நலந்திகழுங் கொக்கூர் மேவுங்
குமரகிரு பாகரநீ ராடீ ருஞ்சல். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொக்குயருந் தேவியர்கள் சூழ்ந்து வைகப்
பக்கமர மாதரெழிற் கீதம் பாட
மிக்குயரு பூதகண மார்த்தே நிற்ப
நெக்குருகு நெஞ்சினொடு மன்ப ரேத்தப்
பக்குவஞ்சேர் மெய்யடியா ருள்ளக் கோயில்
புக்கிருந்து புகலுதவும் புனித வாழ்வே!
கொக்குவில்வ ளர்கருணைக் கடலே! ஞான
குமரகிரு பாகரநீ ராடீ ருஞ்சல். 11

வாழி

உலகுயர வளனல்கு முகில்கள் வாழி
ஓங்குமறை யாகமங்கள் கலைகள் வாழி
நிலவிவரு மறநூல்கள் நீடு வாழி
நிலைபெறுவா ரோதுசடாட் சரமும் வாழி
நலமுதவு மன்னவர்செங் கோலும் வாழி
நாட்டமிகு மனுபூதிச் செல்வர் வாழி
குலவுமுயர் தொண்டர்கடங் கூட்டம் வாழி
குமரகிரு பாகரர்நற் றிருத்தாள் வாழி.

University
01 DEC 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகமயம்

# கொக்குவிற்
# கிருபாகர சுப்பிரமணியர் ஊஞ்சல்

1889ஆம் ஆண்டில்

குகதாசர் ச. சபாரத்தின முதலியாரால் இயற்றப்பட்டது.

## காப்பு

செந்திருவுக் குறையுளென விளங்கு கீர்த்திச்
சேணோங்கு மணிமாட விஞ்சி சூழ்ந்த
கந்தமலி கொக்குவினங் கடவுள் கிர்பா
கரசுப்ர மணியர்மீ தூஞ்சல் பாட
முந்திமய சயிலமயி றன்னை வேட்டு
முன்னவர்க்கு முன்னான முதல்வ னீன்ற
தந்திமுக வைந்துகர வெந்தை தூய
தாமரைச்செஞ் சரணமல ரிணைகாப் பாமே.

## நூல்

தூயதொரு பிரணவமே பீட மாகச்
சுத்தமறை யொருநான்குங் கால்க ளாக
ஆயுமுய ராகமங்கள் விட்ட மாக
ஆறங்க மிருதிவகை விதான மாகப்
பாயபுரா ணம்பலமேற் படாம தாகப்
பன்னுகலை ஞானங்க ணாண்க ளாகக்
காயபொழிற் கொக்குவினங் கந்த கிர்பா
கரசுப்ர மணியரே யாடி ரூஞ்சல். 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசருமு லப்பகுதி பீட மாகப்
பெருமைதரு மிச்சிரங்கள் கால்க ளாக
ஆசுதவி ரைந்துசிவம் விட்ட மாக
அத்துவா தீதபர மரண தாகப்
பாசவகை நாற்புறமு மெழினி யாகப்
பஞ்சபுலன் பொறிகரணந் தீப மாகக்
காசணவு கொக்குவினங் கலைஞ கிர்பா
கரசுப்ர மணியரே யாடீ ரூஞ்சல். 2

தொண்டருள மென்கமலம் பீட மாகத்
துதிகுலவு மவரன்பே கயிற தாக
மண்டியம நியமங்கள் விட்ட மாக
மன்னுதொழி லைந்துமரு ளாட லாக
அண்டரிய ஞானவொளி தீப மாக
ஆகமவே தாந்தவகை பாட லாகக்
கண்டமுவு கொக்குவினம் பெரும கிர்பா
கரசுப்ர மணியரே யாடீ ரூஞ்சல். 3

ஆரொளிய வைரமணி பீட மாக
அரசவை டூரியங்கள் விட்ட மாகச்
சீரியநித் திலநிரைக ணாண்க ளாகச்
செம்பவள மாணிக்கம் விதான மாக
நேரியகோ மேதகமேற் றொங்க லாக
நீலமொடு புட்பரா கங்கா லாக
காருலவு கொக்குவினங் கடவுள் கிர்பா
கரசுப்ர மணியரே யாடீ ரூஞ்சல். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பு,மகளு மாமகளு மூஞ்ச லாட்டப்
புகல்விசய கலைமகளிர் கீதம் பாட
ஏமமொடிந் திரையிரதி யடைப்பை யேந்த
இருபுறமு மரம்பையர்கள் கவரி வீச
தாமமுடி யரிபிரம ராசி கூறச்
சதமகனு மமரருமேற் குடைக விப்பக்
காமருவு கொக்குவினங் குமர கிர்பா
கரசுப்ர மணியரே யாடீ ரூஞ்சல். 5

கந்தருவர் கின்னரர்க ளியங்க ளார்ப்பக்
கலமுறுக்கி யாழ்முனியே ழிசைகள் பாட
அந்தணரா ரியர்முனிவர் வேத மோத
அடியர்குழா மாகமநூல் அறைந்து நிற்ப
சுந்தரவேத் திரமேந்தி யிளவ னிற்பத்
தொக்கபிற வீரரெலாஞ் சூழ்ந்து போற்றக்
கந்தமலி கொக்குவினம் பெரும கிர்பா
கரசுப்ர மணியரே யாடீ ரூஞ்சல். 6

வீரியவேற் படையாட விசிக மாட
விறல்பரவங் குசகேத னங்க ளாடச்
சீரியவச் சிரவபய திறங்க ளாடத்
திகழுமணி மரைவரதச் செல்வி யாடப்
போரியறண் டணிமணிவிற் பொலிவுற் றாடப்
புறவிணையிற் றந்திகுற மாத ராடக்
காரியல்கொக் குவிலமரெங் கந்த கிர்பா
கரசுப்ர மணியரே யாடீ ரூஞ்சல் 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறங்க மிருதிபுரா ணங்க ளோங்க
ஐந்தெழுத்தா கமமறைக ளடர்ந்து தேங்க
நீறெங்கு மக்கமணி யோடி லங்க
நிகமநெறி யாறெழுத்து நெடிது பொங்கப்
பேறெங்கு மிருவகைய பூசை நல்கப்
பிரதிரர்கட னிறையொழியா துலகு பேணக்
காறங்கு கொக்குவினங் குமர கிர்பா
கரசுப்ர மணியரே யாடீ ரூஞ்சல். 8

நின்னடியர் சுற்றமெழு மூன்று மோங்க
நீதிமுறை யரசர்பணி நெடிது தூங்க
உன்னரிய சைவநெறி யுலகு தேங்க
உனதுதிரு வடியன்பெ னுளத்து வீங்க
மன்னுமென குறைகளெலா மரபி னீங்க
மற்றுனதா லயசேவை மரபு வாங்கக்
கன்னிலவு கொக்குவிலெங் கந்த கிர்பா
கரசுப்ர மணியரே யாடீ ரூஞ்சல். 9

பல்லுயிரு மீடேறி யின்ப மாரப்
பாரெங்கும் போரின்றி யமைதி சேர
நல்லவர்கண் மேன்மேலும் விருத்தி யாக
நாடெங்குஞ் செழிப்புற்று வறுமை போகச்
சொல்லுதமிழ் மொழிவழக்கு நீடு வாழச்
சுத்தாத்து விதசைவந் துலங்கிச் சூழக்
கல்விகெழு கொக்குவிலெங் கந்த கிர்பா
கரசுப்ர மணியரே யாடீ ரூஞ்சல். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

வேல்வாழி மயில்வாழி குலிசம் வாழி
விறல்பரவு நவவீர ரடியார் வாழி
பாலேறு தந்திகுற மாதர் வாழி
பன்னுமறை யாகமமா றெழுத்தும் வாழி
நூலேறு மக்கமணி கண்டி வாழி
நோன்புசிவ நெறியரச நீதி வாழி
கால்சூழுங் கொக்குவில்வா ழெந்தை கிர்பா
கரசுப்ர மணியர்பதம் வாழி வாழி. 11.

## எச்சரீக்கை

சீரார்தரு கொக்கூர்வளர் செல்வா - எச்சரீக்கை
சேந்தாசுரர் வேதாவுமை யேந்தால் - எச்சரீக்கை

செவ்வானிகர் மெய்யாய்சிவ குருவே - எச்சரீக்கை
தெவ்வானவர் தமைவீட்டிய திறலோய் - எச்சரீக்கை

இந்ராதிபர் சிறைமீட்டரு ளெந்தாய் - எச்சரீக்கை
இருகூறெழ வருசூரடு மிறைவா - எச்சரீக்கை

தேனார்குழன் மானார்புணர் தேவே - எச்சரீக்கை
தீயோருள நாடாதகல் செவ்வேள் - எச்சரீக்கை

மயிலூர்ந்தொரு சேவற்கொடி வைத்தாய் - எச்சரீக்கை
மலைகீண்டிடு செவ்வேற்படை வரதா - எச்சரீக்கை

என்னாருயி ரன்னாய்பர மன்னே - எச்சரீக்கை
இன்னாவுற வினியாற்றல மெந்தாய்- எச்சரீக்கை 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

முத்திமுதல் வாகுமர முருகா பராக்கு
முன்னவர்வரு கொக்குவையுண் முனியே பராக்கு

பத்திதரு சக்தியுமை பாலா பராக்கு
பன்னிரு கரத்தவொரு பரமே பராக்கு

தந்திகுற மாதார்புணர் சாமி பராக்கு
சங்கரனுக் கோத்துரைத்த தாதா பராக்கு

பச்சைமயின் மீதுவரு பத்தா பராக்கு
பங்கயனைச் சிறைவீழ்த்த பகவா பராக்கு

தொண்டர்வறு மைப்பிணியைத் துடைப்பாய் பராக்கு
தூயசிவ ஞானவடி வானாய் பராக்கு

கெருடேறிவ ரம்மான்மரு கோனே பராக்கு
கிருபாகர சிவசுப்பிர மண்யா பராக்கு. 13

## லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
ஆலமர்ந்த செல்வன் மைந்த லாலி லாலி

பச்சை மேனி யுமை பயந்த பாலா லாலி
அச்ச மகற்று மாறு முகவா லாலி லாலி

சூரன் குலம் வேரறுத்த சுப்ரமண்யா லாலி
சுடர்வடிவேல் ஏந்து வீரா லாலி லாலி

முத்தமிழ்க் குரவ கிருபா கரமுருகா லாலி
முத்துக் குமார சாமி யெங்கள் வாழ்முதலே லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி தெய்வ யானை யணை வள்ளலே லாலி
புள்ளிமயி லேறியிடர் போக்கி டுவாய் லாலி

பக்கு வர்க்கு ஞான நல்கும் பரமகுரு லாலி
கொக்குவி லமர்கிரு பாகர லாலி லாலி. 14.

**மங்களம்**

மங்களம் மங்களம் மங்களம் சய சய
மங்களம் மங்களம் மங்களம்

ஒப்பிலாத பிரமமே யோருருக் கொண்டுவந்து
செப்புமாறு முகமுடைச் செல்வனாய சேந்தனுக்கு (மங்)

காலையிளம் பரிதிபோலக் கவினும்பொன் மேனியனாய்
வேலையோச்சி யிருட்பகை வேரறுக்கும் வேலவற்கு (மங்)

சரணவத்தி லேபிறந்து சராசரத்தி லேநிறைந்து
பரமனுக்குப் பிரணவத்தின் பொருளுரைத்த பாலகற்கு (மங்)

ஆறுபடை வீடமர்ந்து மாறுபட்ட சூர்தடிந்து
வீறுகொண்ட சேவலேந்தி யேறுமயி லமர்ந்தவற்கு (மங்)

இச்சாகிரியா சத்திமார் இருமருங்கு மமர்ந்திட
இச்சகத்தி லுயிர்களை இயக்கிஞான மருள்பவற்கு (மங்)

கொக்குவிற் பதிநயந்து கோயில்கொண்ட குமரன்பால்
மிக்குயர்ந்த பத்திகொண்டு மேவுமன்பர் யாவர்க்கும் (மங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஊசல்

டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் இயற்றியது

காப்பு

தமாலநிறத் தோன்மருகர் தண்கொக்கூர் முத்துக்
குமாரர்திரு ஊசலினைக் கூற - எமாதிடுக்கண்
எல்லா மகற்றி யினிதளிக்கும் பன்னயங்கள்
எல்லா மொருகோட் டிபம்

விருத்தம்

பூமேவு மிமயமிரு வடிவி னின்றாற்
போன்மிளிர்பொற் றூணமிசை வயிர விட்டத்
தேமேவு தரளவடம் பூட்டு மொன்பான்
எழின்மணிக ளிழைத்திடுபொற் பலகை சாலத்
தூமேவு கங்கைநதித் திரைகள் வார்த்துத்
துற்றபல்பூச் சரவணத்தின் றோற்றங் காட்டக்
கோமேவு மதனிலெழுந் தருளி முத்துக்
குமாரசுகு மாரரே யாடி ரூசல். (1)

திருகாற்று மொருபூதத் தெவ்வை மாய்ப்பச்
சிறந்திடுநக் கீரனார் செப்பு மொப்பில்
முருகாற்றுப் படையொருபா லன்பர் பாட
முன்னரிய சந்தவகை மொழிந்தே யுள்ளம்
உருகாற்று மருணகிரி நாத ரன்பின்
ஓதுதிருப் புகழொருபா லன்பர் பாடக்
குருகாற்று மிலஞ்சிகுலாங் கொக்கூர் முத்துக்
கமாரசுகு மாரரே யாடி ரூசல். (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானோங்கு பரங்குன்றிற் றெய்வ யானை
மணந்தாடுந் திருவூச லாட்டும் வாசக்
கானோங்கு வரைக்குறவர் மகளை வேட்டுக்
களித்தாடுந் திருவூச லாட்டு முன்னாத்
தேனோங்கு திருவிளையாட் டொன்றுங் காணாச்
சிறியேங்கண் டானந்தந் திளைக்கு மாறு
கூனோங்கு வளைமுரனீர்க் கொக்கூர் முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல் (3)

மாதவனுந் திருமகளும் வாணி யோடு
மலரவனுஞ் சசியொடுவா சவனு மேனி
ஆதவமா ரரம் பையரோ டமரர் தாமும்
அகமகிழ்ந்தே நிதமூச லாடி வாழத்
தீதவமார் சூர்முதலா தியர்க டம்மைச்
செற்றருளு மருட்கடலே யாடீ ரூசல்
கோதவமி லறிஞர்செறி கொக்கூர் முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல். (4)

தோலாத பெருவிறல்கொள் சூரன் றன்னைத்
தொலைத்தபெருஞ் சூரரே யாடீ ரூசல்
மாலாத விறற்சிங்க வதனன் றன்னை
மாய்த்தருளுஞ் சிங்கமே யாடீ ரூசல்
சீலாதி யகன்றகரி வதனன் றன்னைச்
செற்றருளு மதகரியே யாடீ ரூசல்
கூலாதி யழகுறுநீர்க் கொக்கூர் முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணத்தி னறும்பதுமப் பாயன் மீதே
தங்கிவிளை யாட்டயர்ந்தீ ராடீ ரூசல்
இரவணையு முடலவுணர்த் தொலைத்துத் தேவர்
இனங்களைக்காத் தருள் புரிந்தீ ராடீ ரூசல்
பரவணையு மன்புடையோர் நினைத்த வாங்கே
பசுமயிலின் வந்தருள்வீ ராடீ ரூசல்
குரவணையும் பொழில் சூழுங் கொக்கூர் முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல். (6)

வழுத்துபல குணவாள ராடீ ரூசல்
வள்ளிதிரு மணவாள ராடீ ரூசல்
பழுத்தவருட் டனமுடையீ ராடீ ரூசல்
பசுமயில்வா கனமுடையீ ராடீ ரூசல்
முழுத்தவிரு முத்தலத்தீ ராடீ ரூசல்
முந்நான்கு கைத்தலத்தீ ராடீ ரூசல்
கொழுத்த தாழ் தெரிபவர் வாழ் கொக்கூர் முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல். (7)

அலகில்பெரு விறல்வகையோர் வகையார் பாட
அடியவருக் கருள்வகையோர் வகையார் பாட
நிலவுமெழில் வகையினையோர் வகையார் பாட
நிலைத்ததமி ழருள்வகையோர் வகையார் பாட
மலரலங்கல் படிந்தெழுந்து வண்டு பாட
மங்கையர்க ணடம்புரிந்து மகிழ்ந்து பாடக்
குலவள மலிந்திலகு கொக்கூர் முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல். (8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைத்தவரு ணிறைவிழியீ ராடீ ரூசல்
மலரவனுக் கறை மொழியீ ராடீ ரூசல்
இழைத்தசுட ரயிற்படையீ ராடீ ரூசல்
இருமருங்குங் குயிற்படையீ ராடீ ரூசல்
தழைத்தசிறை மயிற்பரியீ ராடீ ரூசல்
தணிகையெனு மெயிற்புரியீ ராடீ ரூசல்
குழைத்தமலர்ப் பொழில்குலவு கொக்கூர் முத்துக்
குமாரசுகு மாரரே ராடீ ரூசல் (9)

நாமேவு நான்மறையா கமங்கள் வாழ
நவவீரர் முதலான நலத்தோர் வாழ
ஏமேவு சித்தாந்த சைவம் வாழ
இணையில்புக ழைந்தெழுத்தா றெழுத்து வாழத்
தேமேவு செந்தமிழ்ச் சொல் செழித்து வாழத்
தெண்டிரை நீர் சுலவீழத் தேயம் வாழக்
கோமேவு கொக்குவிலூர் வாழ முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல். (10)

## எச்சரீக்கை

*இராகம் – சாவேரி* *தாளம் – உரூபகம்*

திருவேசெழு மணியேசுவைத் தேனேகரி முகன்பின்
வருவேலவ கொக்கூர்ப்பதி வாழ்வேயெச் சரீக்கை. (1)

வேலாகழற் காலாமயின் மேலாமறை நூலா
மூவாவளக் கொக்கூர்ப்பதி முருகாவெச் சரீக்கை (2)

சூராதியர் பேராதிக டொலையப் பொரும் பெரும்போர்
வீராதிப கொக்கூர்ப்பதி விமலாவெச் சரீக்கை. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவா தமிழ்ப் பாவாவறச் சேவாகனன் மதலாய்
காவார்தரு கொக்கூர்ப்பதிக் கந்தாவெச் சரீக்கை. (4)

குறமாதெனுங் கொடிசேர் கொழு கொம்பேகுண மலையே
அறமார்தரு கொக்கூர்ப்பதி யரசேயெச் சரீக்கை. (5)

கந்தாமலர்க் கடம்பாவள்ளி கந்தாவெனை யாள
வந்தாய்திருக் கொக்கூர்ப்பதி வாழ்வேயெச் சரீக்கை. (6)

புலவோர்புரி யிகறீர்த்தருள் போதாசம வேதா
பலவார் பொழிற் கொக்கூர்ப்பதிப் பரமாவெச் சரீக்கை. (7)

தீராதெய்வ சேனாபதி தெவிட்டாவமு தனைய
பேராதிருக் கொக்கூர்ப்பதிப் பெருமானெச் சரீக்கை. (8)

ஈசாபவ நாசாவிசு வாசாபிர காசா
தேசாதிருக் கொக்கூர்ப்பதிச் செல்வாவெச் சரீக்கை. (9)

ஏகாவள்ளி மோகாமயிற் பாகா பர யோகா
நாகார்புனற் கொக்கூர்ப்பதி நாதாவெச் சரீக்கை. (10)

கோதாதிக ளுடையாரொடு கூடாதெனை யாளும்
நாதாதிருக் கொக்கூர்ப்பதி நம்பாவெச் சரீக்கை. (11)

மயிலேறிய வழகாமதி வதனாபசும் பொழிலிற்
குயிலேறிய கொக்கூர்ப்பதிக் கோமானெச் சரீக்கை. (12)

மலமூன்றுமெய் யடியார்களை மருவாதரு மைலா
நலமூன்றிய கொக்கூர்ப்பதி நாதாவெச் சரீக்கை. (13)

பஞ்சானெனை முடையாரருள் பஞ்சானன மனையாய்
மஞ்சார்பொழிற் கொக்கூர்ப்பதி வாழ்வேயெச் சரீக்கை. (14)

நாராயணன் மருகாபுகழ் நவவீரர்க ளரசே
காரார்பொழிற் கொக்கூர்ப்பதிக் கந்தாவெச் சரீக்கை. (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாசையும் பெண்ணாசையும் வருத்தாவித மருளும்
அண்ணாதிருக் கொக்கூர்ப்பதி யரசேயெச் சரீக்கை. (16)

அழையாமுனம் விரைந்தோடிவந் தடியார்க்கரு ளத்தா
வழையார் பொழிற் கொக்கூர்ப்பதி மணியேயெச் சரீக்கை.(17)

பயனாறறு படைவீடெனும் பாலாவயில் வேலா
நயனார்தரு கொக்கூர்ப்பதி நாதாவெச் சரீக்கை. (18)

காலாயுதக் கொடியாய்கழற் காலாவுமை பாலா
சேலார்புனற் கொக்கூர்ப்பதிச் செல்வாவெச் சரீக்கை. (19)

பிணியாதிக ளணுகாதெமைப் பேணும் பெய ராளா
தணிகாசல கொக்கூர்ப்பதிச் சாமீயெச் சரீக்கை. (20)

## கீர்த்தனங்கள்

*இராகம் – சுருட்டி.* *தாளம் – சாபு*

### பல்லவி

ஆறுமு கனைச்சி தானந்த ரூபியை
அனுதினம் நினை மனமே.

### அனுபல்லவி

வீறும் பசுமயி லேறும்வி நோதனை
மெய்யன்பார்க் குவகையின் விளம்புமெய்ப் போதனை (ஆறு)

### சரணங்கள்

வள்ளிதெய் வானை மனமகிழ் நாதனை
வானவ ரனுதினம் வணங்கும்பொற் பாதனை
வெள்ளிலை வேலணி விமலவி சாகனை
மெய்ப்பொரு ளாயென்றும் விளங்குறு மேகனை (ஆறு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்த மறுத்தருள் பாலிக்குங் கந்தனை
பரமனற னுதல்விழிப் பால்வரு மைந்தனைக்
கந்த மிகுந்த கடம்பணி மெய்யனைக்
கமல பா வனைக்குட்டுங் கையனை யையனை (ஆறு)

மலய முனிக்குத் தமிழ் வழங்குஞ்செவ் வாயனை
வாழ்த்தி வணங்குமன்பர் மனத்துறை தூயனை
அலையவி டாதென்னை யாண்டிவு தாரனை
ஆனைவ தனன்றம்பி யாகிய தீரனை (ஆறு)

அதிர்கட லடக்கிய வற்புதத் தேவினை
ஆறெழுத் தின்பொரு ளாகிய கோவினை
முதிர்சினச் சூரனை முடித்தருள் வீரனை
மொழியுங்கொக் கூர்நகர் முத்துக்கு மாரனை (ஆறு)

*இராகம் – சகனா,* *தாளம் – ஆதி*

**பல்லவி**

கொக்குவிற்பதி வாசனே
குறத்தி வள்ளி நேசனே

**அனுபல்லவி**

பக்குவர் தொழு வேலனே
பரமசிவன் தரு பாலனே (கொக்கு)

**சரணங்கள்**

அனுதின முனதிரு வனச மலரடியை
எனதுள நினைவுற வினிதருள் புரிமதி (கொக்கு)

ஐம்புல னான்மிக வெம்பிய வெனதுளம்
அம்பர சுகமெனு மம்புதி யுறவருள் (கொக்கு)

இயலிசை முதலிய நயனுறு தமிழியல்
மயலற வெனதுள முயலுற வருள்புரி (கொக்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இராகம் – செஞ்சுருட்டி* *தாளம் – ஆதி*

**பல்லவி**

உன்னை நம்பினே னையா
உமையருள் மெய்யா

**அநுபல்லவி**

அன்னை தந்தை நீயே
ஆண்டளிப் பாயே (உன்னை)

**சரணங்கள்**

நெஞ்ச மெங்கு மோடி நினைத்தவை தேடி
வஞ்சர் சொல்லின் வாடி வருந்திப் பின் பாடி (உன்னை)

அஞ்ஞான நீங்க ஆனந்தந் தேங்க
மெய்ஞ்ஞான மோங்க மிகக்களி தூங்க (உன்னை)

சிமையவுல் லாச தெய்வயானை நேச
இமையவ ரீச எழிற் கொக்கூர் வாச (உன்னை)

*இராகம் – துஜாவந்தி* *தாளம் – சாபு*

**பல்லவி**

உனை மறவாத ஒருவர மடியேனுக்
குவந்தருள் புரிந்திடு வாயே

**அநுபல்லவி**

நனைமலர்ப் பொழிற் செந்தி னகரிலெ ழுந்தருளி
நம்பு மடியவர்க் கின்ப மருள்புரி
நாத பரசுக போத வனுதினம் (உனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

உலவும் பசுமயிலு முனது திருவுருவும்
ஒழிவின்றி நினைப்பதெந் நாளோ - துன்பம்
பலவும் புரியுமைந்து புலனுக்கு யான்றொண்டு
பண்ணிச்செ லுமடிமை யாளோ - வளம்
குலவும் பரங்கிரித் தேனே - சுர
குலங்களைக் காத்தருள் வோனே - எங்கும்
நிலவும் பரம்பொரு ணீயென் றறிந்த தொண்டர்
நிறைந்த பழனியி லுறைந்த குருபர
நீப மணிந்தப்ர தாப சுரவர (உனை)

தாலத்தி லெங்கெங்குஞ் சஞ்சரித் தெவரையும்
தாங்கியென் னுள்ளந்தள் ளாடும் - பிறர்
சாலப் புகழ்ந்திடின் மகிழ்ந்துசற் றிகழ்ந்திடின்
தளர்ந்து சலித்துமிக வாடும் - எழிற்
கோலக் குலாசலத் தோளா - தெய்வ
குஞ்சரி வள்ளிமண வளா - அரும்
சீலத் தவர்பலர் திரண்டு கனிந்துதுதி
செய்து நறுமலர்கொய்து பூசனை
செய்யு மேரகத் தைய வனுதினம் (உனை)

மலையிடை யகப்பட்டு வருந்துநக் கீரர்தம்
வருத்த மகற்றவயில் விடுத்தாய் நெஞ்சம்
உலவி லருணகிரி யார்திருப் புகழைக் கேட்
டுவந்து பெருங்கருணை கொடுத்தாய் - பெருங்
கலையின் முடிந்தவொரு மணியே - வள்ளி
கண்களித் திடத்தோன்றுங் கனியே - கன
மலைவிற் பரன்விழி வருமுரு காமயில்
வாகனா சுர ரேகநாயக
மக்கள் போற்றுநற் கொக்கூர் வளர்பர (உனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

*இராகம் – சுருட்டி* *தாளம் – சாபு*

மங்களம் மங்களம் - சுகுமாரா
மங்களம் மங்களம்

பங்கச நயனவுத் துங்கவி சாகவி
டங்ககுக சிகிதுரங்க - மலர்ச்
தொங்கல ணிபுயவி லங்கல ழகவருட
சங்கரி சுத தமிழ்ச் சங்கவுத்தாரா (மங்களம்)

ஈச மிகுந்ததுக்க நர்ச சுசனவிசு
வாச தெய்வகுஞ்சரி நேச - மிகு
வாசக் கடம்பணியுந் தேச மிகு ஸ்வயம்ப்ர
காச திருப்பழனி வாசகர் வேசா (மங்களம்)

வேதம னோகர கீதசு சனபசு
போதவி நாசவி நோத - சுர
பாதப கரமது சூதன விதிசுர
கேதநி வாரக நாதவ தீதா (மங்களம்)

பாலலோ சனனருள் பால சுவைமிகுந்த
பாலன மொழிவள்ளி பால - தண்டைக்
கால வசுரகுல கால - மறைபுரியும்
ஒல பருதிநிகர் கோல செவ்வேலா (மங்களம்)

மத்த கரிவதன னைத்தெறு திறலின்மி
குத்தக ரிக்கிளைய வத்த - பரி
சுத்த நிராமய நித்த வகிலசக
கர்த்த கொக்கூருறை முத்துக்குமாரா. (மங்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்கூர்ப் புதுக்கோவிற்

# சித்திவிநாயகர் திருவூஞ்சல்

செவ்வேளன்பர் செ. வேலாயுதபிள்ளை

### காப்பு

உலகுபுக ழீழவள நாடாந் தாயின்
ஒளிவிளங்குந் திருமுகத்துக் கழகு செய்யும்
திலகமெனத் திகழுமெழிற் கொக்கூர் மேவும்
சித்திவிநா யகர்பேரி லூஞ்சல் பாடப்
பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கு மந்தப்
பரம்பொருளே துணையாக நிற்கு மென்றே
அலகிலருட் சோதியினை யகத்தி ருத்தி
அஞ்சலித்துச் செஞ்சொல்லால் வழுத்து வேனே.

### நூல்

ஆரணங்க ளவைநான்குங் கால்க ளாக
அரியசிவா கமங்களுயர் விட்ட மாக
ஏரணங்கு கலைஞானம் வடங்க ளாக
ஏற்றமுறு முபநிடதம் பலகை யாகத்
தாரணமாம் பிரணவமே விதான மாகத்
தத்துவங்கள் முத்துவடத் தொங்க லாகச்
சீரணங்கு கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடீ ரூஞ்சல் (1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளோங்கு சாத்திரங்கள் தண்ட தாகப்
பொதுமறையாந் திருக்குறளே தகழி யாக
அருளோங்கு திருமுறைகள் திரிக ளாக
அடியருளத் தெழுமன்பே நெய்ய தாகத்
தெருளோங்கு சிவஞானச் சுடர்கொ ளுத்திச்
செய்தமைத்த திருவிளக்கி னொளிநின் றோங்கத்
திருவோங்கு கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடி ரூஞ்சல். (2)

திங்களொடு செங்கதிரோன் கவிகை தாங்கத்
தீக்கடவுள் சுடருந்தீ வட்டி தாங்கச்
சங்கரனார் தோழன்பொன் னடைப்பந் தாங்கச்
சமுத்திரரா சன்பன்னீர்ச் செம்பு தாங்கப்
புங்கவனா மனிலன்பூங் கவரி வீசப்
புரந்தரனுங் கரங்கூப்பிப் புகழ்கள் பேசப்
சிங்கலிலாக் கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடி ருஞ்சல் (3)

நாமகளும் பூமகளு மூஞ்ச லாட்ட
நாரதருந் தும்புருவும் யாழ்கள் மீட்ட
ஏமருவு காந்தருவர் கீதம் பாட
எழிலாரு மரம்பையர்கள் நடன மாடப்
பூமருவு பிரமன்கைத் தாளம் போடப்
புத்தேளி ரெல்லாரும் வந்து கூடச்
சீமருவு கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடி ருஞ்சல் (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமா னுமையுடனே சேர்ந்து வந்து
சிந்தைமகிழ்ந் தருணோக்கஞ் செய்து நிற்க
நவவீரர் புடைசூழ விளையோ னிற்க
நாரணனு நல்லாசி கூறி நிற்கப்
பவளமணித் திருமேனி தழுவுஞ் சத்தி
பாங்காயுந் திருவுருவிற் கரந்து நிற்கச்
சிவமருவுங் கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடீ ரூஞ்சல். (5)

சுந்தரஞ்சேர் மணிமகுடந் தலையின் மின்னச்
சூரியனேர் பொற்சுட்டி நுதலின் மின்னக்
கந்தமலி மலர்மாலை கழுத்தின் மின்னக்
கனகமணிப் பூணாரம் மார்பின் மின்னப்
பந்தனமா யரைதனிலே பாம்பு மின்னப்
பாதார விந்தத்திற் சிலம்பு மின்ன
செந்தமிழ்வாழ் கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடீ ரூஞ்சல். (6)

பூதியணி நெற்றியிலே பட்ட மாடப்
பொன்முடியிற் பொருந்துமுத்துச் சரங்க ளாட
காதிலணி குண்டலங்கள் கதிர்விட் டாடக்
கழுத்திலணி முத்தாரம் பதக்க மாடத்
தீதகற்றும் படைக்கலங்கள் கரத்தி லாடத்
திகழரையிற் பட்டாடை கச்சு மாடச்
சீதவயற் கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடீ ரூஞ்சல். (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசிவன் மகனாரே யாடீ ருஞ்சல்
அஞ்சுகரப் பெருமானே யாடீ ருஞ்சல்
போதமருள் மெய்ப்பொருளே யாடீ ரூஞ:சல்
புத்தி சித்தி புணர்ப்பவரே யாடீ ரூஞ்சல்
மோதகத்தை யுகந்தவரே யாடீ ரூஞ்சல்
முத்தியின்பந் தருபவரே யாடீ ருஞ்சல்
சீதிகழுங் கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடீ ரூஞ்சல். (8)

அத்திமுக முடையவரே யாடீ ரூஞ்சல்
அகரவுயி ரானவரே யாடீ ரூஞ்சல்
வித்தைவலந் தருபவரே யாடீ ரூஞ:சல்
விக்கினங்கள் தீர்ப்பவரே யாடீ ரூஞ்சல்
முத்திநிலை சேர்ப்பவரே யாடீ ரூஞ்சல்
மும்மலங்கள் தீர்ப்பவரே யாடீ ரூஞ்சல்
சித்தருறை கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடீ ரூஞ்சல். (9)

சைவநெறி தழைத்தோங்க வாடீ ரூஞ்சல்
சதுர்மறையா கமம்விளங்க வாடீ ரூஞ்சல்
துய்யதமிழ் செழித்தோங்க வாடீ ரூஞ்சல்
தொழுமடியார் துயர்நீங்க வாடீ ரூஞ்சல்
தெய்வவழி பாடோங்க வாடீ ரூஞ்சல்
திருத்தலங்கள் சிறந்தோங்க வாடீ ரூஞ்சல்
செய்விளங்கு கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகரேநீ ராடீ ரூஞ்சல். (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாழி

அருமைவரு தமிழ்வாழி யறங்கள் வாழி
அஞ்செழுத்து வாழிபசு நிரைகள் வாழி
கருமைவரு முகில்வாழி கழனி வாழி
கடவுளுறை தளிவாழி கருணை வாழி
இருமைதரு கலைவாழி யீழம் வாழி
இருநிலத்தி லறவோர்தம் மாட்சி வாழி
திருமருவு கொக்கூரிற் கோயில் கொண்ட
சித்திவிநா யகர்பாதஞ் சிறந்து வாழி.

### எச்சரிக்கை

சிவனார்தரு கயமாமுகத் தேவே - எச்சரிக்கை
சிவமூர்த்தியின் வேறன்றெனுங் கோவே - எச்சரிக்கை (1)

ஓங்காரமே யுருவாய்வரு பொருளே - எச்சரிக்கை
ஆங்காரம தழித்தாட்கொளு மருளே - எச்சரிக்கை (2)

வலவைக்கொடி படருங்கொழு கொம்பே - எச்சரிக்கை
உலகத்தவர் நலனுக்கொரு நம்பே - எச்சரிக்கை (3)

மாயாசுரர் பகைவீட்டிடு மருந்தே - எச்சரிக்கை
வீயாப்பொருள் விழைவார்க்கொரு விருந்தே - எச்சரிக்கை (4)

இடையூறெனு மிருளோட்டுவிண் மணியே - எச்சரிக்கை
விடையேறிய வழலாடிகண் மணியே - எச்சரிக்கை (5)

ஆயுங்கலை யனைத்துந்தரு மாதீ - எச்சரிக்கை
தோயுந்தொறு மின்பந்தரு சோதீ - எச்சரிக்கை (6)

அல்லல்கெடுத் தாளும்மருட் குன்றே - எச்சரிக்கை
தொல்லைவினை தொலைக்கும்பிடக் கன்றே - எச்சரிக்கை (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசாங்குசங் கரமேந்திய பரமே - எச்சரிக்கை
மாசாதிவல் வினைபோக்கிடும் வரமே - எச்சரிக்கை (8)

உலகெங்கனும் வழிபட்டிடு மோவே - எச்சரிக்கை
குலவுந்தமிழ்க் கொக்கூருறை கோவே - எச்சரிக்கை (9)

மாவின்கனி மகிழுங்கண பதியே - எச்சரிக்கை
காவிற்பொலி கொக்கூர்க்கொரு கதியே - எச்சரிக்கை (10)

## பராக்கு

சித்திதரு மத்திமுகத் தேவே - பராக்கு
சிவனுளத்திற் சிவணிநிற்குந் தேவே - பராக்கு (1)

ஆகுவின்மீ தேறியூரு மண்ணலே - பராக்கு
அன்பருள்ளத் தமர்ந்திருக்கு மண்ணலே - பராக்கு (2)

எடுத்தவினை முடிக்கவரு ளேந்தால் - பராக்கு
எச்செயற்கு முற்கணிற்கு மேந்தால் - பராக்கு (3)

காகமாகிக் கமண்டலத்தைக் கவிழ்த்தீர் - பராக்கு
கயிலையிலே யவ்வையினை வைத்தீர் - பராக்கு (4)

கயமுகனைக் கட்டழித்த களிறே - பராக்கு
கந்தரெண்ண வந்தணைந்த களிறே - பராக்கு (5)

போகமோக்கம் ஞானயோகம் புணர்ப்பீர் - பராக்கு
புத்திசித்தி வல்லபங்கள் புணர்ப்பீர் - பராக்கு (6)

குறுமுனிக்கு வரமளித்த கோவே - பராக்கு
குவலயத்தை வயிற்றடக்குங் கோவே - பராக்கு (7)

மூர்த்திபதி னாறுடைய முதலே - பராக்கு
முகத்திலொரு கையுடைய முதலே - பராக்கு (8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கினங்கள் போக்கவல்ல வீரா - பராக்கு
வீடுபேறு மருளவல்ல வீரா - பராக்கு (9)

கோடதனை யாயுதமாக் கொண்டீர் - பராக்கு
கொக்கூரை யிடமாகக் கொண்டீர் - பராக்கு (10)

## லாலி

லாலீ லாலி லாலீ லாலி லாலி
நீலமேனி யுமைபயந்த நீதரே லாலி (1)

தும்பி முகத்துச் சோதி வடிவே லாலி
தம்பி யழைக்க விபமாய் வந்தீர் லாலி (2)

நம்பி படைத்த வமுத முண்டீர் லாலி
நம்பு மடியர் நடலை தீர்ப்பீர் லாலி (3)

வேத முடியில் வீற்றிருப்பீர் லாலி
போத மருளி வீடு தருவீர் லாலி (4)

ஒது கலைக ளுணர்த்துங் குருவே லாலி
தீது போக்கி யருளுந் திருவே லாலி (5)

எண்ணும் பொருள்க ளெல்லா மானீர் லாலி
எண்ணுங் கரும முடிக்க வருவீர் லாலி (6)

உண்ணின் றியக்குங் குடிலைப் பொருளே லாலி
விண்ணும் மண்ணு நிறையு மருளே லாலி (7)

மிக்கவ ரிலாத விநாயக மூர்த்தி லாலி
விக்கினம் போக்கும் விநாயக வேந்தே லாலி (8)

திக்கெலாந் தொழுநி றைந்த தேவே லாலி
கொக்குவில் சிறக்க வந்த கோவே லாலி (9)

லாலீ லாலி லாலீ லாலி லாலி
லாலீ லாலி லாலீ லாலி லாலி (10)



University of ...
01 DEC 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் சயசய
மங்களம் மங்களம் மங்களம்

கற்பக விநாயகர்க்குக் கணபதிக்கு மங்களம்
சொற்பதங் கடந்தசோதி சொரூபருக்கு மங்களம் (1)

நீறிலங்கு நெற்றிகொண்ட நித்தருக்கு மங்களம்
ஆறிலங்கு சடையர்தந்த வத்தருக்கு மங்களம் (2)

பிரணவ வழவினர்க்குப் பிள்ளையார்க்கு மங்களம்
சரவண பவர்க்குமூத்த சங்கரர்க்கு மங்களம் (3)

ஆகுவாக னத்தமர்ந்த வமலருக்கு மங்களம்
நாகபூட ணந்தரிந்த நாதருக்கு மங்களம் (4)

சிந்துர முகத்தருக்குச் செல்வருக்கு மங்களம்
இந்திளம் பிறைநிகர்த்த வெயிற்றருக்கு மங்களம் (5)

மாங்கனியை விரகிற்பெற்ற வல்லபர்க்கு மங்களம்
பாங்கிற்சித்தி புத்திவைத்த பரமருக்கு மங்களம் (6)

வல்லபை மணாளருக்கு வரதருக்கு மங்களம்
நல்லவை செய்பவர்க்கு நர்த்தருக்கு மங்களம் (7)

அவ்வையைக் கைலைசேர்த்த வைங்கரர்க்கு மங்களம்
தெவ்வரைத் தேய்த்தழிக்குந் தீரருக்கு மங்களம் (8)

முக்கனி யுகந்தவர்க்கு முதல்வருக்கு மங்களம்
கொக்குவின் மேவுமொற்றைக் கொம்பருக்கு மங்களம் (9)

விக்கினங்கள் தீர்க்குமெங்கள் விநாயகர்க்கு மங்களம்
கொக்குவிற் பதியுகந்த குணேசருக்கு மங்களம்(10)

மங்களம் மங்களம் மங்களம் சயசய
மங்களம் மங்களம் மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்கூர்ப் புதுக்கோவில்

# வேணுகோபாலன் திருவூஞ்சல்

அ. நாகலிங்கம் அவர்கள் பாடியது

### காப்பு

நீணிலத்து நின்றிசைத்த குழலி னோசை
நிலநிறைந்து வானகத்தும் பரவ வூதும்
வேணுகோ பாலனிசை யூஞ்சல் பாட
விரவியென துள்ளத்துள் விஞ்சி நின்று
காணுமிட மெலாநிறைந்து காட்சி நல்கும்
கணபதியே காப்பாக நிற்ப னென்றே
பேணியவன் திருவடிக்கே சென்னி சேர்த்துப்
பிரணவத்தை யோதியுளே சிந்திப் பேனே

சீரிலங்கு செம்பொன்னாற் கால்கள் சேர்த்துச்
சிறந்தொளிகால் வயிரத்தால் விட்டம் பூட்டி
ஏரிலங்கு மிரத்தினநல் விதான மாக
எழிலுடனே மாணிக்கப் பலகை சேர்த்து
நேரிலங்கு முத்துவடம் நிரலத் தூக்கி
நிறைவுடனே யமைந்ததோ ரூஞ்சன் மீது
வாரிலங்கு மடவார்க ளிருபால் மேவ
வளர்வேணு கோபாலா வாடி ரூஞ்சல் (1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர் சோமன் சூரியனுங் குடைபி டிக்க
வந்துநம னுடைவாளே தாங்கி நிற்க
அளகர்கோ னடைந் தடைப்பை யேந்தி நிற்க
அங்கியவ னொளிநிறைதீ வர்த்தி தாங்க
வளியவனு மெழினிறைசா மரையி ரட்ட
வண்மைநிறை கொக்கூரை நீங்கா தென்றும்
வளம்பலவு மடியவர்கட் குதவும் வள்ளால்
வளர்வேணு கோபாலா வாடீ ரூஞ்சல். (2)

கன்றாலே விளவெறிந்த கமலக் கண்ணா
களியுடனே யுறிதிருடுங் கரும்பே தேனே
குன்றாலே மழைதடுத்துக் கோக்கள் காத்தாய்
குருந் தொசித்துக் கோபியர்கள் மானங் கொண்டாய்
நின்றாடிக் காளிங்கன் கொடுமை தீர்த்தாய்
நிலையாகப் புதுக்கோயில் வாசங் கொண்டாய்
என்றெனினும் யிதஞ்செய்வா யெங்கள் கோவை
எழில்வேணு கோபாலா வாடீ ரூஞ்சல். (3)

நறுமலர்க ளுடன்முடித்த குஞ்சி யாட
நல்லவரை மிசையுடுத்த பட்டு நீடக்
குறுநகைசெய் செவ்வாயிற் குறும்பு சேரக்
கோக்குலங்க ணாற்புறமுந் துள்ளிச் சூழ
நிறைநீல மேனியழ கொழுகிச் சோர
நின்றநிலை கண்டவர்க ளன்பு கூர
நறைபொழுகு பொழில்சூழ்ந்த கொக்கூர் மன்னும்
நயவேணு கோபாலா வாடீ ரூஞ்சல். (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவகியா ரகத்துதித்த தெய்வச் சாலீ
சிறந்தயசோ தைவளர்க்க வளர்ந்தாய் வஞ்சப்
பூவரச னாங்கஞ்சன் புணர்ப்பி னீங்கிப்
புவிகாக்கத் தலையெடுத்தாய் புலமை சான்ற
நாவரசர் நற்புலத்திற் செழித்தாய் முற்றி
நற்கருணைக் கதிரீன்று நன்மை செய்தாய்
வாவிநிறை கொக்கூரின் வளஞ் சிறக்க
வருவேணு கோபாலா வாடி ரூஞ்சல். (5)

வெண்ணெயுணும் வேட்கைமிகு வுறியி லேறி
வீடுதொறும் விரும்பியுண்ட வெறுவாய்க் கள்வா
பண்ணொழுகும் பாட்டிசைத்துக் குழல் கொண் டுதிப்
பண் டுபசு நிரை மேய்த்த பவள வாயா
துண்ணெனவே கோபியர்க ளுயர மெய்தத்
துடுக்குடனே யவராடை கவர்ந்த சோரா
விண்ணளவு மாடமலி கொக்கூர் மேய
வேணுகோ பாலனே யாடி ரூசல். (6)

பார்த்தனுக்குப் போர்முகத்துக் கீதை யோதிப்
பற்றறவே பணி செய்யும் வகையுங் காட்டிப்
போர்த் தொழிலை முற்று வித்தாய் புவியின் பாரம்
போக்குதற்கு நீசெய்த புணர்ப்புத் தானோ
தீர்த்தனே செங்கண்ணா கருணை வாழ்வே
திருமகளும் பூமகளுந் தோயு மார்பா
கீர்த்திமிகு கொக்கூரிற் குடிய மார்ந்தாய்
கிளர்வேணு கோபாலா வாடி ரூஞ்சல். (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்முத்தந் தருதாயர் வடந்தொட் டாட்ட
வாணியவள் வாழ்த்தெடுத்தே யாசி கூற
நோய்நீங்கு கோபியர்கள் சீர்த்தி யெல்லாம்
நுவன்றுவந்து பல்லாண்டு பாடிப் போற்ற
வாய்தல்வரு வனிதையர்கள் வணங்கி மண்ட
மலர்மகளு நிலமகளு மருவிச் சேர
ஆய்தமிழோர் சேர்கொக்கூ ரகலா தென்றும்
அணைவேணு கோபாலா வாடி ரூஞ்சல். (8)

பஞ்சவர்க்குத் தூதுவனே யாடி ரூஞ்சல்
பார்த்தனுக்குச் சாரதியே யாடி ரூஞ்சல்
நஞ்சுடைய நாகணையா யாடி ரூஞ்சல்
நான்மறையி னுட்பொருளே யாடி ரூஞ்சல்
கஞ்ச மகள் காதலனே யாடி ரூஞ்சல்
கமலக்கண் ணுடையவனே யாடி ரூஞ்சல்
விஞ்சைகள் வல்லவனே யாடி ரூஞ்சல்
வேணுகோபாலனே யாடி ரூஞ்சல் (9)

பொங்குகடற் பள்ளியனே யாடி ரூஞ்சல்
பூபாரம் தீர்ப்பவனே யாடி ரூஞ்சல்
சங்கொருகை யுடையவனே யாடி ரூஞ்சல்
சக்கரநற் படையானே யாடி ரூஞ்சல்
மங்குனிற மேனியனே யாடி ரூஞ்சல்
மாசுகளைந் தாள்பவனே யாடி ரூஞ்சல்
வெங்கடநற் கிரியானே யாடி ரூஞ்சல்
வேணுகோ பாலனே யாடி ரூஞ்சல் (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

மறையவரும் வானவரும் வாழி வாழி
மழைபொழிந்து வளஞ்சிறக்க மாசு நீங்க
முறைதவறா மன்னவர்தா மோங்கி வாழ்க
முத்தமிழின் றிறம் வாழ்க முனிவோர் வாழ்க
நிறைதவறா நல்லொழுக்க நீடி நிற்க
நித்தனது திருவருளே நிறைந்து பொங்க
அறைபுனல்சூ ழுலகமெலா மமைந்து வாழ்க
அன்புநெறி தழைத்தோங்க வறமும் வாழ்க.

## எச்சரிக்கை

இசை பின்படர் நிரை மேய்த்திடு மிறையே - எச்சரிக்கை
நசையாலுறி வெண்ணெய்கவர் கள்வா - எச்சரிக்கை

குன்றான் மழை தடுத்தேநிரை காத்தாய் - எச்சரிக்கை
கன்றால்விள வெறிந்தேகனி யுகுத்தாய் - எச்சரிக்கை

ஐவர்க்குறு துணையாகிய வண்ணா - எச்சரிக்கை
பைவைத்துறு நாகம்பட நடித்தாய் - எச்சரிக்கை

ஆண்டாளணி மாலையுகந் தணிந்தாய் - எச்சரிக்கை
பூண்டோய்முலை மகண் மார்புற வைத்தாய் - எச்சரிக்கை

செங்கண்ணர வணையிற்றுயில் கொள்வாய் - எச்சரிக்கை
சங்கம் மொரு கையேந்திய தலைவா - எச்சரிக்கை

புல்லாங்குழ லூதிவரு புனிதா - எச்சரிக்கை
முல்லைநல முதல்வா செங்கண் முராரீ - எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

திருமா லிருஞ்சோலைத் தேவே - பராக்கு
திருவேங் கடம்பிரியாச் செம்மால் - பராக்கு

மதுரா புரிக்கரசே வள்ளால் - பராக்கு
துவரா புரியாண்ட தூயா - பராக்கு

பிருந்தா வனவழகா பிரானே - பராக்கு
வருந்தா வணமருளு மாதீ - பராக்கு

கச்சி வரதப்பா கண்ணா - பராக்கு
நச்சி யுறிதிருடு நம்பீ - பராக்கு

வண்ணை மகிழ்ந்துறையும் வரதா - பராக்கு
நண்ணிப் பொன்னாலை நயந்தாய் - பராக்கு

கொக்கூர்ப் புதுக்கோயிற் கோவே - பராக்கு
இக்கு வேட்கத்தா ஈசா - பராக்கு

## லாலி

லாலீ லாலீ லாலீ லாலீ லாலீ
கோபியர் காதல் கொண்டு களித்தாய் லாலி.

நல்லோர் வாழ நண்ணினை ஞாலம்
பொல்லார் பொன்றப் புணர்ப்புகள் செய்தாய் லாலி.

முரளீ தரனே முராரி லாலி லாலி
அரவ மீதே அறிதுயில் கொள்வாய் லாலி.

சங்கொடு கையாய் சார்ங்க வில்லாய் லாலி
பொங்கு பாற்கடற் புத்தமு தானாய் லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர் பாடியில் ஆடல் புரிந்தாய் லாலி
நேயங் கொண்டு நேர்வார்க் கருள்வாய் லாலி

கொக்கூர்ப் புன்னைக் கீழமர் கோவே லாலி
சக்கர தாரி சாந்த மூர்த்தி லாலி.

### மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் சய சய
மங்களம் மங்களம் மங்களம்

வைய முற்று மிசைபரப்பும் வள்ளலுக்கு மங்களம்
கையிற் சங்கு கொண்டிலங்கு கடவுளுக்கு மங்களம்

பஞ்சவர்க்குத் தூதுசென்ற பண்ணவற்கு மங்களம்
நஞ்சு தங்கு பாந்தளாடு நம்மிறைக்கு மங்களம்

உரலிலேறி வெண்ணெயுண்ட வுத்தமற்கு மங்களம்
அரவு பாய லாயுறங்கு மாண்டகைக்கு மங்களம்

புதிய கோயிற் புன்னைநீழற் கோவலற்கு மங்களம்
நிதிய நல்கு மலர்மகட்கு நிலமகட்கும் மங்களம்.

மங்களம் மங்களம் மங்களம் சயசய
மங்களம் மங்களம் மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கொக்குவில்

# அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான வெளியீடுகள்

1966 மஹா கும்பாபிஷேக மலர்

1983 தேர்த் திருப்பணி மலர்

1983 ஆறுமாமுகன் அருட்பேராயிரம்

1984 சித்திரத்தேர்ச் சிறப்பிதழ்
(பக்திப் பாமாலைத் திரட்டு அடங்கியது)

1986 சண்டேசர் மலர்

1988 Essentials of Hinduism by S. Sabaratna Mudaliyar.

1990 புதுக்கோயில் பிரபந்தத்திரட்டு - முதலாம் பாகம்

1992. புதுக்கோயில் பிரபந்தத் திரட்டு - இரண்டாம் பாகம்

1998 மஹா கும்பாபிஷேக மலர்

1998 புதுக்கோயில் பிரபந்தத்திரட்டு - மூன்றாம் பாகம்

1999 திருமால் ஆயிரம் திருநாம துதி

2001 Life of Thirugnana Sambanthar by S. Sabaratna Mudaliyar.

2001 புதுக்கோயில் பிரபந்தத் திரட்டு - நான்காம் பிரசுரம்
கிருபாகர சிவசுப்பிரமணியர் பிள்ளைத் தமிழுடன்

2003 நால்வர் வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில்

# அருள்மிகு கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மூர்த்திகள் பேரிலான பிரபந்தங்கள்

1. **கோக்குவில் கிருபாகர சுப்பிரமணியர் ஊஞ்சல்**
   குகதாசர் ச. சபாரத்தின முதலியார் - 1889
   *புதுக்கோவில் பிரபந்தத் திரட்டு - நான் காம்பாகத்துள்ள விபரம் இது. பாடல் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் நால்வர் வழிபாடு என்னும் நூலில் உள்ளது.*

2. **கோக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் மும்மணிக் கோவை.**
   ஸ்ரீமான் ச. சபாரத்தின முதலியார் - 1929இல் முதற் பதிவாகியது.

3. **கோக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் வெண்பா அந்தாதி**
   குகதாசர் ச. சபாரத்தின முதலியார் - 1929இல் முதற் பதிவாகியது.

4. **கொக்கூர் நான்மணிமாலை**
   குகதாசர் ச. சபாரத்தின முதலியார் - 1929இல் முதற்பதிவாகியது.

5. **சரவணபவமாலை.**
   குகதாசர் ச. சபாரத்தின முதலியார்
   *கொக்குவில் சோதிடப் பிரகாச யந்திரசாலையில் விபவ வருடம் வைகாசி மாதம் முதற்பதிவாகியது.*

6. **கோக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் தோத்திரமாலை**
   அருட்கவி சீ. விநாசித்தம்பி - 1968



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கோக்குவில் குமர கிருபாகரர் ஊஞ்சல்
பண்டிதர் சைவப்புலவர் மு. சின்னத்தம்பி - 1966

8. கலித்துறை அந்தாதி (29 பாடல்கள் மட்டும்)
பண்டிதர் சைவப்புலவர் மு. சின்னத்தம்பி - 1972.
*அந்தாதி முற்றுப்பெறுமுன் ஆசிரியர் இறைவன் கழலிணை சார்ந்தார்.*

9. புதுக்கோயிற் புதுத்தேர் அகவல்
பண்டிதை ச. அமிர்தாம்பிகை - 1983

10. ஆறுமுகன் அருட்பேராயிரம்
பண்டிதர் ச. சுப்பிரமணியம் - 1983

11. கொக்குவில் கிருபாகரர் திருப்பள்ளியெழுச்சி
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை - 1983
*இரண்டு தொடக்கம் பதினொன்று வரையிலான பிரபந்தங்கள் 1983 தேர்த் திருப்பணி மலரில் உண்டு.*

12. கொக்குவில் சித்திவிநாயகர் இரட்டை மணிமாலை
அ. நாகலிங்கம்

13. கொக்கூர் கிருபாகரர் அந்தாதி
அ. நாகலிங்கம்

14. கொக்குவில் புதுக்கோவிற் கலம்பகமாலை
அ. நாகலிங்கம்

15. கொக்குவில் சித்திவிநாயகர் பதிற்றந்தாதி
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை

17. கொக்குவில் கிருபாகரர் இரட்டைமணிமாலை.
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை

18. கொக்கூர் ஒருபா ஒருபஃது
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. கோக்குவில் சேவல் விருத்தம்
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை

20. கோக்குவில் மயில் விருத்தம்
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை

21. கோக்குவில் வேல் விருத்தம்
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை

*பன்னிரண்டு முதல் இருபத்தொன்று வரையிலான பிரபந்தங்கள் பக்திப் பாமாலைத் திரட்டிலுள்ளனவ*

22. கோக்குவில் சித்திவிநாயகர் ஒருபா ஒருஃது
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை

23. கோக்குவில் சித்திவிநாயகர் திருவூஞ்சற் பதிகம்
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை

24. கோக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் பதிற்றுப்பத்தந்தாதி
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை

25. கோக்குவில் முத்துக்குமாரசுவாமி ஊசல்.
உ.வே. சாமிநாதையர்

26. கோக்குவில் வேணுகோபாலன் திருவூஞ்சல்
அ. நாகலிங்கம்

27. கோக்குவில் வேணுகோபாலன் ஒருபா ஒருபஃது
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை

*இருபத்திரண்டு முதல் இருபத்தேழு வரையிலான பிரபந்தங்கள் புதுக்கோயில் பிரபந்தத் திரட்டு முதலாம் பாகத்துள்ளன.*

28. கோக்குவில் சித்திவிநாயகர் கலிவெண்பா
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை

29. கோக்குவில் குமரன் திருவெழுகூற்றிருக்கை
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. கோக்குவில் சிவசுப்பிரமணியர் கலிவெண்பா
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை
*இருபத்திரண்டு தொடக்கம் முப்பது வரையிலான பிரபந்தங்கள் புதுக்கோவில் பிரபந்தத் திரட்டு இரண்டாம் பாகத்துள்ளன.*

31. கோக்குவில் புதுக்கோவில் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி பதிகம்
பண்டிதர் ச. சுப்பிரமணியம்.

32. வேலும் மயிலும் துணை - முருகன் எழுகூற்றிருக்கை
பண்டிதர் ச. சுப்பிரமணியம்

33. கோக்குவில் சிவசுப்பிரமணிய சுவாமி பதிற்றுப்பத்தந்தாதி.
பண்டிதர் ச. சுப்பிரமணியம்

34. ஸ்ரீ சுப்பிரமணியர் புயங்க தோத்திரம்
பண்டிதர் ச. சுப்பிரமணியம்

35. ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி தோத்திரம்
அருட்கவி சீ. விநாசித்தம்பி

36. கொக்கூர்க்குமரன் ஆற்றுப்படை
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை

37. கோக்கூர் ஏசல்
கொக்குவில் செ. வேலாயுதபிள்ளை
*முப்பத்தொன்று தொடக்கம் முப்பத்தேழுவரையிலான பிரபந்தங்கள் புதுக்கோவில் பிரபந்தத் திரட்டு மூன்றாம் பாகத்திருந்து பெறப்பட்டவை*

38. கோக்குவில் சிவசுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ்
வ. சிவராஜசிங்கம்.

39. கோக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மான்மியம்.
பண்டிதர் ச. சுப்பிரமணியம்
*முப்பத்தெட்டு முப்பத்தொன்பது என்னும் இலக்கத்தமைந்த பிரபந்தங்கள் புதுக்கோயில் பிரபந்தத்திரட்டு நான்காம் பாகத்திருந்து பெறப்பட்டவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்டன் சுந்தரத்தைக் கடவுள் கவர்ந்தார்

இயற்கை வனப்பும் வரலாற்றுச் சிறப்புக்கொண்டதும் இந்து சமுத்திரத்தின் முத்தென இலங்குகின்றதும் - நித்திலங்கொழிக்கின்றதுமான இலங்கைத் தீவின் வடபால் அமைந்த யாழ். குடாநாட்டில், பிரசித்திபெற்ற - புகழ்பூத்த கிராமங்களில் கொக்குவில் பதியுமொன்றாகும்.

இது தன்னைச் சுற்றி நலாபுறமும் திருநெல்வேலி, கோண்டாவில், தாவடி, சுதுமலை, ஆனைக்கோட்டை, ஆறுகால்மடம், நாச்சிமார் கோயிலடி என்கின்ற கிராமங் களை எல்லைக் கிராமங்களாகக் கொண்டு பெரு மிதத்துடன் விரிந்து, பரந்து, நீண்டு கிடக்கிறது.

ஆன்மீக மணங்கமழும் ஆலயங்கள் பலவற்றையும் பிள்ளைகளைச் சமுதாயத்திற்கு ஏற்றவகையில் புடமிடும் பண்பாட்டுப் பரிவர்த்தனை நிலையங்களான பாடசாலைகள் பலவற்றினையும், தொழில்சார் நடவடிக்கைகளுக்கு ஏற்ற பல்தொழில் நுட்பக் கல்லூரியினையும், எல்லையில் தமிழர் களுக்கே வரப்பிரசாதமாக அமைந்த யாழ். பல்கலைக் கழகத்தையும், வாசிப்பு மனிதனை முழுமையாக்கும் என்ற முதுமொழிக்கிணங்கக் கல்விசார் நடவடிக்கைகளுக்கு உறுதுணைபுரியும் எண்ணற்ற சனசமூக நிலையங் களையும் பலதொழில்விருத்தி நிறுவனங்களையும் தன்னகத்தே கொண்டு - கொக்குவில் கிராமம் மிளிர் கின்றது.

பத்திமான்களையும், கல்விமான்களையும், அறிஞர்க ளையும், இலக்கியவாதிகளையும், விவசாயிகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரிகளையும், சுருட்டுத் தொழிலாளர்களையும் பெரும் எண்ணிக்கையிற் கொண்ட கிராமமாக இது என்றோ சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய செழிப்பு வாய்ந்த கிராமத்தில் முத்து ராஜா அன்னமுத்து குடும்பம் செழிப்புடன் வாழ்ந்தது. இருப்பினும் பிள்ளைப் பாக்கியம் தள்ளிப்போக அன்ன முத்து மீனாட்சியம்மையை நினைந்து விரதமிருந்து வரம் வேண்டினாள். கேட்டது - கிடைத்தது - சந்தோசத்துக்கு அளவேயில்லை. முத்துராஜாவுக்கும் அன்னமுத்துவுக்கும் தலைமகனாய் - ஒரே மகனாய் 1927.09.14ம் திகதி மீனாட்சி சுந்தரனனார் பிறந்தார். மீனாட்சியை வேண்டிப் பெற்ற மையால் பெற்றோரினால் சூட்டப்பட்ட நாமமே இதுவாகும்.

இவர் பிறந்து பதினாறே நாட்களில் தாய் இறைவ னடிசேரத் தந்தையே தாயும் தகப்பனுமானார். இவரைச் சீராட்டி, கண்ணெனக் காத்துப் பொன்னெனப் போற்றிக் கல்வியறிவையூட்டிப் பாசத்துடன் வளர்த்தார்.

அந்தக் காலப் பகுதியிற் சிங்கப்பூரிலும், மலேசியா விலும் யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் பல தரப்பட்ட துறை களிற் செல்வாக்குடன் வேலைபார்த்த நேரம்; கொடிகட்டிப் பறந்தநேரம். மதிப்புடன் இருந்த காலம் - பல சிங்கப்பூர்ப் பென்சனியர்களையும் மலேசியப் பென்சனியர்களையும் யாழ்ப்பாணம் கொண்டிருந்த வேளை - தொழில் நிமித்தம் முத்துராஜா மலேசியா பயணமானார். மகன் ஆரம்பக் கல்வியைப் புகழ்பூத்த கல்லூரிகளில் ஒன்றான கொக்குவில் இந்துக் கல்லூரியிற் பயின்று கொண்டிருந்த வேளை இடைநிறுத்தித் தன்னுடன் அழைத்துச் சென்றார் அப்பா. அப்போது அவருக்கு வயது பத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசியாவிற் கல்வியை ஆங்கில மீடியத்தில் தொடர்ந்தார். தனது பதினெட்டாவது வயது வரை படிப்பினைத் திறமையாகத் தொடர்ந்தார். பெற்ற கல்வித் தரத்துடன் கட்டாய இராணுவ சேவையில் தம்மை இணைத்துக்கொண்டார். அங்கு பல பயிற்சிகளைப் பெற்ற அவர் தனது புலமையாலும் திறமையாலும் 'கப்டன்' தரத்துக்குச் சேவையில் பதவி உயர்த்தப்பட்டார்.

தீவிரவாதிகளைத் தேடி - மலேசியாக் காடுகளில் ஒப்பிரேஷன் பல செய்து களங்கள் பல கண்ட ஒரு இராணுவ வீரர் இவர். இதனால் வெள்ளையர்களினால் 'கப்டன்' எனச் செல்லமாக அழைக்கப்பட்டார். அவர்களின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவராகவும் திகழ்ந்தார். அன்றிலிருந்து இறக்கும் வரை 'கப்டன்' என்ற பட்டம் அவரின் நிலைத்த பெயராயிற்று.

மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் கொக்குவிலின் மகுடம். இந்தியாவிருந்து அழைக்கப்பட்ட பல அறிஞர் பெருமக்களாலும் பெரியோர்களாலும் கதாப்பிரசங்கம், சொற்பொழிவுகள் கண்ட வரலாறு இதற்குண்டு. கொக்கு வில் இந்துக் கல்லூரி அம்மக்களின் சிரசு. பெருமைமிக்க சொந்த மண்ணின் ஈர்ப்புக் காரணமாகத் தந்தை மலேசியாவில் மறுமணம் புரிந்தும்கூட - பார்த்த இராணுவ வேலையையும் உதறித் - தாயகத்துக்கு 1955ம் ஆண்டு வந்து சேர்ந்தார்.

உடலுறுதியும், ஆண்மையும், சுந்தரமும் பொருந்திய சுந்தரத்தாருக்குக் கொக்குவிலைச் சேர்ந்த சரவணமுத்து நித்தியானந்தம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி பரமேஸ் வரியைப் பெரியோர்கள் ஒன்றுகூடி நிச்சயம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தனர். அன்று முதல் பரமேஸ்வரி, மீனாட்சி சுந்தரனார் - பார்வதி சமேதராயினர். குடும்ப வண்டியை இருவரும் அன்போடும் பண்போடும் பரஸ்பர புரிந்துணர்வோடும் ஒற்றுமையாக இழுத்து வந்தனர்.

குடும்ப உறவிலும், சமுதாய பொதுநல சேவையிலும், ஆலயத்திருத் தொண்டுகளிலும் கல்வி மேம்பாட்டிலும் தன்னை இணைத்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கையில் சுபாஷாமினி, அனுஷா, ஜெகரூபி, சரவணபவன், சாயிரேகா என்கின்ற நான்கு பெண் பிள்ளைகளுக்கு மத்தியில் ஒருமைந்தனையும் பெற்றெடுத்தனர். 'சாயி பாவாவை' நினைத்துத் தொடங்கும் காரியங்கள் சித்தித்தமையால் அவர் பக்தராகவும் இருந்தார். அதனால் தானோ என்னவோ இளைய மகளுக்குச் சாயிரேகா எனும் பெயரையும் வைத்தனர் போலும் - தற்போது நோய்முற்றி 'ஒப்பிரேஷன்' தியேட்டருக்குக் கொண்டு செல்லும்போது கூட 'சாயிராம்' என அவர் 'நா' உச்சரித்துக் கொண்டேயிருந்தது.

பிள்ளைகள் அனைவரும் கல்வி கற்று நல்ல நிலைக்கு வரவேண்டுமென்பதிற் பெருவிருப்புக் கொண்டு செயற்பட்டார். தான்கற்ற கலைக்கூடமாய கொக்குவில் இந்துக் கல்லூரியில் அனைவரையும் சேர்த்துப் படிக்க வைத்தார். மலேசியாவில் வகித்த இராணுவ வேலையை இடையில் விட்டு வந்தபடியால் பென்சன் இல்லாமல் போனது. இருப்பினும் பிள்ளைகளை நல்ல நிலைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்ற பெருவிருப்புக் காரணமாக நெல்சந்தைப்படுத்தும் சபையில் களஞ்சியப் பொறுப்பாளராக 1960 களிலிருந்து 1983 வரையில் கடமையாற்றினார். இதனால் பல மேலதிகாரிகளின் பாராட்டுதல்களையும் பெற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் அனைவரையும் ஒழுக்கத்துடன் கூடிய நற்பண்புகளுடனும் மற்றவர்களை மதித்துப் பேணும் மானிட நேயத்துடனும் வளர்த்தெடுத்தார்.

மூத்தமகள் சுபாஷாமினியைச் சங்கீதத்தில் கலாவித்தகியாக்கியும் ஏனைய பெண்பிள்ளைகளுக்கு சங்கீதத்துடன் கூடிய நடன - நுண் கலை அறிவைப் போதித்தும் மகன் சரவணபவனைத் தொழில்நுட்ப அலுவலராகவும் உருவாக்கி அக மகிழ்ந்தார்.

1983ம் ஆண்டு கோண்டாவில் புகையிரத ஸ்ரேச னுக்கு முன்னாலுள்ள களஞ்சியப் பொறுப்பாளர் பதவியி லிருந்து ஓய்வுபெற்றாலும் கூட குடும்ப நன்மை கருதி 1990ம் ஆண்டு வரையில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையிலும், கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் பாதுகாப்பு ஊழியராகக் கடமையாற்றினார். கோயில், குளம், சாய்பாபா பஜனை என்பவற்றுக்குச் செல்வதை வாழ்நாளில் கடமையாக ஏற்றுக்கொண்டவர்.

1990ம் ஆண்டு மூத்த மகள் சுபாஷாமினிக்கு சங்கீத ஆசிரியை பதவி நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் கிடைத்தது. வயோதிப வயதில் ஓய்வு வேண்டிப் பிள்ளைகளின் வேண்டுகோளுக்கிணங்கத் தாயும் தந்தையும் நீர்கொழும்புக்கு மூத்த மகளுடன் கூட வந்தனர். பெரிய தாய் பாக்கியராசாவின் சங்கீத ஞானம் சுபாஷாமினி ஆசிரியரிடமும் குடிகொண்டது. அன்றிலிருந்து இன்றுவரை எண்ணற்ற மாணவர்களின் சங்கீத வளர்ச்சிக்கும் போட்டிகளில் நற்சான்றுப் பத்திரங்களையும், தங்க விருதுகளையும் பெறுவதற்குத் தன்னாலான முழு ஒத்துழைப்பினையும் நல்கிக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றார். இவரது காலத்திலேயே க.பொ.த. உயர்தர மாணவர்களுக்குச் சங்கீதம் ஒரு பாடமாகவும் அறிமுகப் படுத்தப்பட்டது. இது அவரின் முயற்சிக்குக் கிடைத்த பெருவெற்றி. மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெறுகின்றார்கள். இராமநாதன் நுண்கலைப் பீடத்திற்கும் மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

பிள்ளைகள் அனைவரும் வளர்ந்தனர். திருமண வயதையும் அடைந்தனர்.

ஊடகத் துறையில் பெரும் செல்வாக்கைப் பெற்ற வரும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலா ளரும், அகில இலங்கைச் சமாதான நீதவானும் சமூக ஜோதியுமான ஆழ்வாப்பிள்ளை கந்தசாமியை சுபா ஷாமினிக்கும், வியாபாரம்புரியும் காரைநகர் வதி பால சுப்பிரமணியத்தை அனுஷாவுக்கும், லண்டன் மாநகர் வதி ரூபேந்திரனுக்கு ஜெகரூபியையும், நெதர்லாந்தில் பொலிஸ் இலாகாவில் கடமைபுரியும் சோமஸ்கந்த ராஜாவுக்கு சாயிரேகாவையும் திருமணம் செய்துவைத்து ஆனந்தக் கண்ணீர் வடித்து உள நிறைவு அடைந் திருந்தார்.

மீசையுடனான அவர் தோற்றம் பொலிஸ்காரனை நினைவுபடுத்தும். ஆனால் அது இராணுவ மீசை. 'கொக்கு விலாரோடு கொழுவினால் இழுவல்' - என்ற கூற்றை மெய்பிக்கும் வகையில் யாரும் அனாவசியமாக மிண்டி னால் கோபத்தில் மீசை துடிக்கும். நறுக்குத் தெறித்தாற் போல் ஆங்கில வார்த்தைகள் நெஞ்சில் வேல் பாய்வது போன்றிருக்கும். அடுத்த கணம் எல்லாவற்றையும் மறந்து அன்போடு அரவணைக்கும் குணஇயல்பினர். நெற்றியில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதா சந்தனத் திலகம் - நிமிர்ந்த நடை. நேரான பார்வை. அன்பான பேச்சு. பண்பான விருந்தோம்பல் பழகுவதற்கு இனியவர். இங்கு அவருடன் அந்நியோன்யமாகப் பழகத் தொடங்கிய பின்னர் அவர் பற்றி நான் அறிந்த ஆளுமைப் பண்புகள் இவை.

தான் பழகிய ஒருவர் மற்றவர்களால் இழிவாக - இழித்துரைக்கப்படுவதை மனது பொறாமல் அவருக்காகப் பரிந்துரைக்கும் மனப்பாங்குடையவர். அதிலும் என்னைப் பற்றி யாராவது குறைசொன்னால் கதை முடிந்தது. நம்பிக்கை உடையவர்களுக்கு என்றும் அவர் சோடு போனதில்லை. நோய்வாய்ப்பட்ட நிலையில் 'ஆப்பி ரேஷனுக்கு' '0' நெக்கட்டிவ் இரத்தத்துக்கு ஓடித்திரிந்த பொழுது நவலோக ஆஸ்பத்திரியில் 212ம் இலக்க றூமில் கட்டிலில் படுத்திருந்தபடி வயிற்றைத் தடவிக்கொண்டு எனது கையைப் பிடித்தபடி எல்லாம் சரிதானே 'சேர்' என்று கேட்டார். அது இப்பொழுதும் எனது நெஞ்சில் எதிரொலித்தபடியே இருக்கிறது.

கேசாயினி, தசீவன், ரூபினா, ரூபசாயி, ரூபபார்த் தீசன், சாயீசன், சூரியா என்கின்ற பேரப்பிள்ளைகளைக் கண்டு - அவர்களுடன் கொஞ்சிக் குலாவி மழலை மொழி கேட்டு இன்புற்றிருந்த வேளை - யார் கண் பட்டதோ- திடீரென நோய்வாய்ப்பட்டார்.

அஸ்மா வருத்தம், வயிறு நோவும், சளியும் இனங்காணப்பட்ட வருத்தங்களாக மாறி, மாறி வைத்திய ரிடம் திரிய வைத்தன. வருத்தம் கூடியதே தவிர குறைய வில்லை. ஈற்றில் ஆக இயலாமற் போகவே நவலோக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்கள். 'ஸ்கேனிங்' மூலம் வயிற்றில் பெரிய கட்டி 'கான்ஸர்' என அறிவித்தார்கள்.

தலையிடிக்கு தலையணி மாற்றிய வைத்தியங் களாக முன்னர் செய்த வைத்தியங்கள் அமைந்திருந்தன.

முடிவு ஆப்ரேஸன். வயிற்றில் பெரிய வேள்வி நடப்பதற்கு அவரின் '0' நெக்கட்டிவ் குறூப் இரத்தம் இரத்த வங்கியில் கூட இல்லை. அதுவேறு அலைச்சல். கஸ்டத்தின் மத்தியில் ஒருவாறு பெற்றுக்கொள்ளப்பட்டது. நடந்தது ஆப்ரேஷன். பன்னிரெண்டு நாள்கள் அதிதீவிர கண்காணிப்புப் பிரிவில் உயிரைக் கையில் பிடித்தபடி சுயநினைவுடன் இருந்தார். ஒட்சிசன் தொடர்ந்து கொடுக் கப்பட்டது. இதயம் 'வீக் என்று சொன்னார்கள். 'காட் அற்றாக்' ஒருக்கா வந்து போயிற்று. நாடி ஓட்டம் சீரில்லாமல் கூடிக்குறைந்தது. சேலையின் ஏற்றப்பட்டது. அசுத்த இரத்தம் மூக்கினூடாக வெளிவந்து கொண்டி ருந்தது. வெளிநாட்டில் வதியும் பிள்ளைகளும் வந்தார்கள். பார்த்தார்கள் கவனித்தார்கள் கதைத்தார்கள்.

நெதர்லாந்திலிருந்து மகனைக் கூப்பிட்டார். விசாரித்தார். மகனைப் பார்க்கவில்லை என்ற ஆதங்கம் இருந்தது. 'தம்பி' என்று மகனை வாய் திறந்து அழைத்தார். தந்தையின் வருத்தம் கண்டு தனயனும் துடித்தார். பார்க்க வேண்டுமென்ற பெருவிருப்பில் 2004.03.26ம் திகதி வந்தார். மகனைக் கண்டார். கதைத் தார். கண்ணீர் விட்டார். கதைக்க முடியவில்லை. ஆனந்தப் பெருமூச்சு! மகனின் வரவால் புத்துயிர் பெற்றிருப்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் 2004.04.27ம் திகதி மீழாத்துயிலில் மீனாட்சி சுந்தரனார்.

'கப்டன்' சுந்தரம் என அழைக்கப்படும் மீனாட்சி சுந்தரம் காலனிடம் சிக்காமல் நேரடியாகக் கடவுளிடம சென்றுவிட்டார் என்ற நினைப்பில் அமைதி கொள்வோமாக!

அவரை இழந்து துயருறும் குடும்ப அங்கத்தவர்களுக்கும், குறிப்பாக ஆசிரியை சுபாஷாமினிக்கும் கடவுளிடம் சென்று அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து துயர் நீங்கி ஆறுதலடைய வேண்டுகின்றோம்.

**ந. கணேசலிங்கம்**
அதிபர்
விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி
நீர்கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Univer
★ 0 1 DEC 2021
LIBR
704396
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெற்கு வாயிற் தோற்றம்



கிழக்கு வாயிற் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org